281

உ

# ஸ்ரீ கும்பகோண க்ஷேத்திர மஹாத்மியமும்,

# மகாமஹ வைபவமும்

OFFICE OF THE ... OF BOOKS
10 JAN 1933
MADRAS



பப்ளிஷர்

**P.** சிவகுருநாத பிள்ளை,

கொரநாட்டுக் கருப்பூர், கும்பகோணம்.

PRINTED BY

... STAR BUILDINGS. KUMBAKONAM.

...] **1932** [விலை அணா **5**

22:38.2193R.
N32
149487

ஸ்ரீ

# கும்பகோண க்ஷேத்திர மஹாத்மியமும்

# மஹாமக வைபவமும்

புவிமாதின் திருமுகமென்னச் சிறப்புற்று விளங்கும் நம் பரதகண்டமே, பிரமாதி தேவர்கள் முதல் யாவரும் நன்மைபெற நற்றவம் இயற்றுதற்கு உரியநாடாகும். இக்காரணம்பற்றியே இந்த நம் பரதநாட்டிற்குக் **கர்மபூமி** என்றொரு பெயரும் வழங்குவதாகும். இந்தப் பரதகண்டத்தில் ஸகல பாபங்களையும் போக்கி நற்கதி அருளவல்ல அனேக புண்ணிய தீர்த்தங்களும், க்ஷேத்திரங்களும், மூர்த்தி விசேஷங்களும் ஆங்காங்கு அமைந்துள்ளன. தேவர்களும், ரிஷிகளும் மற்றையோரும், புண்ணிய பூமியாகிய இந்நாட்டிற்கு வந்து, பல பரிசுத்தமான தீர்த்தங்களில் ஆடியும், பகவான் மூர்த்தீகரித்து விளங்கும் தெய்வ ஸந்நிதிகளில் வந்து தெரிசனம் செய்தும், க்ஷேத்திரவாஸங்கள் செய்து தவமியற்றியும் தத்தம் இஷ்டஸித்திகளைப் பெற்றுள்ளார் என்பது நமது புராண இதிஹாஸங்களாகிய பண்டை நூல்களால் நன்கு விளங்குவது காணலாம்.

இத்தகைய பெருமைவாய்ந்த இந்தப் பரதகண்டத்தின் தென்பாகத்தில், வடக்கே **திருவேங்கடம்** என்னும் மலையும், தெற்கே **கன்னி***யும், மற்ற இருபுறங்களிலும் கடல்களும் எல்லைகளாக அமைந்த பிரதேசம் ஒன்றுளது. இந்த நிலப் பரப்பே **தமிழகம்** அல்லது தமிழ்நாடு எனப்படும். இப்பிர தேசத்தை வடநாட்டினர் **திராவிடதேசம்** என்றுங் கூறுவர். இந்தத் தமிழ்நாடு, இன்னகாலமென்று அளவிட்டுச் சொல்ல முடியாத மிகப்புராதன கால முதல் **சேர சோழ பாண்டி யர்கள்** என்னும் மூன்று அரச வம்சத்தவர்களால் ஆளப் பெற்றுவந்தது. அதனால் இத்தமிழகம், சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம் என மூன்று பிரிவின வாக விளங்குவதாயிற்று.

இந்த மும்மண்டலங்களின் நடு நாயகமாக இலங்கும் சோழவளநாடு, தெய்வத்தன்மை நிறைந்த **பொன்னி** யெனும் **காவிரிநதி** பரந்து பாயப்பெற்று நீர்வளம், நிலவளம் குடிவ ளங்களாற் சிறந்து, கல்வி, செல்வம், கைத்தொழில் வாணி பம் முதலியவற்றாலும் தழைந்து,

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ தஞ்சோழ மண்டலமே;"

"மேதக்க சோழவளநாடு சோறுடைத்து;"

என ஆன்றோர் எடுபட்டுக்கூறும் பெருமைக்குரியதாகும். இவ்விதம் பல்வளமும் தழையப்பெற்ற இச்சோழவளநன் னாட்டில் தெய்வ ஸாந்நித்தியம் இனிது விளங்கும் பல தேவா

---

*முற்காலத்தில் கன்னி என்பது ஒருநதியாக இருந்தது. பின் அந்நதியும் அதனைச் சார்ந்த பிரதேசமும் கடலாற் கொள்ளப்

லயங்களமைந்த திவ்ய க்ஷேத்திரங்களும், தீர்த்தத்துறைகளும் சிறந்து விளங்குவன காணலாம். அவற்றுள்,

"சீர்பூத்த பொன்னியெனும் தெய்வநதி பாய்ந்துலவும்
ஏர்பூத்த நாடென் றியம்புமுயர்—பேர்பூத்த
சோணாட்டில் உள்ளபல தொல்பதிக ளிற்சிறந்து
சேணாட ராயுஞ் சிறப்புடைத்தாம்—நாணாளும்
வந்தடைந்தோர் தங்கள் வறுமை யகற்றிநிதி
தந்து சிறப்பளிக்குந் தானமாம்—அந்தணர்கள்
ஓதி மகிழ்கின்ற ஓங்கு மொருநான்கு
வேதவொலி மாறாத மேன்மைத்தாய்ச்—சோதிமிகு
பொன்னும் மணியும் பொலிய உலகுக்கோர்
மின்னும் அணியாய் விளங்குவதாய்—தந்நலத்த
மற்றோர் புகழை மதியாப் பெருமைசேர்
கற்றோர் பயிலுங் கவினுடைத்தாம்—உற்றோர்
கருக்குடந்தை நாடாக் கதியருளும் தெய்வத்
திருக்குடந்தை யென்னுந் தலம்,"

என்னும் சிறப்புக்குறிய திவ்விய க்ஷேத்திரம் ஒன்றுண்டு. அத்தலத்திற்குக் கும்பகோணம் என்பது வடமொழிப் பெயராகும். அந்த க்ஷேத்திரத்தின் அருமை பெருமைகள் அளவிடற் கரியன. ஆயினும் அவற்றை இங்கு ஒருவாறு சுருக்கிக்கூறுவாம்.

---

## முதல் அத்தியாயம்.

### ஆதி கும்பேசுவரர் வரலாறு.

முன்னொரு காலத்தில் மஹாப்பிரளய காலம் ஸமீபித்தது. அதனைக்கண்ட பிர்மதேவர், தாம் படைத்தருளிய உலகங்களும், அவற்றிலுள்ள ஸகல ஜீவாசிகளும் மற்ற பொருள்களும் அழிவுறுமே யென்று மனம் வருந்துவாராயினர். ஆதலின் அந்நான்முகக் கடவுள், ஸ்ரீமஹா கைலாஸ

கிரிக்குச் சென்று, ஆங்கு ஒரு நவமணி மண்டபத்தில், சிவ கணங்கள் புடைசூழ, தேவர்கள், முனிவர்கள் புகழ்ந்தேத்த, பர்வதராஜ குமாரியான ஸ்ரீஉமாதேவியாருடன் திருக்கொலு வில் அமர்ந்திருந்த ஸ்ரீபரமேச்வரரைத் தெரிசித்து வணங்கி நின்றனர். சதுர்முக தேவருடைய முகவாட்டத்தைக்கண்ட அந்தச் சாம்பசிவ மூர்த்தியும், சிருஷ்டிகர்த்தாவான அப்பிதா மஹரை நோக்கி, "ஹே! ஹிரண்ய கர்ப்ப! ஒருநாளும் இல் லாதவாறு உமது வதனங்கள் இன்று வாட்டமுற்று இருக்கக் காரண மென்னே? உமக்கு ஏற்பட்ட குறையாது?" என்று வினவினர்.

நான்முகனர், "ஹே! தேவ தேவ! ஸர்வேச! இன்னும் சிலநாட்களில் உலகங்கள் யாவற்றையும் அழிக்கவல்ல மஹாப் பிரளயம் ஸமீபிக்கப் போகின்றதே! இந்த மஹா ஜலப்பிரளயத் தில், என்னால் சிருஷ்டிக்கப்பெற்றுத் தழைந்து ஓங்கி விளங் கும் ஸகல லோகங்களும் அவற்றிலுள்ள ஜீவராசிகளும் நாச முறுமே! அவற்றை மீண்டும் யான் எவ்வாறு படைப்பேன் என்பதும் தெரியவில்லை! ஆதலின் தேவரீர் இதற்குக் கருணை கூர்ந்து திருவருள் புரியவேண்டுகின்றேன்;" என்று குறை யிரந்து கேட்டுக்கொண்டனர்.

அதனைக்கேட்ட பார்வதிரமணரான ஸ்ரீமஹாதேவரும், ஹே! கமலாஸந! நீவிர் இப்பொழுது ஸம்பவிக்கக்கூடிய பிர ளயத்திற்காகச் சிறிதும் அஞ்சவேண்டியதில்லை. யாம் சொல் லும் வண்ணம் செய்மின்! அதாவது, அமிர்தத்தையே ஜல மாகக்கொண்டு பிசைந்தமண்ணால் குடம் ஒன்று வனைந்து அக்குடத்தை அமிர்தத்தாலேயே நிரப்பி வைப்பீராக! அந்த அமிர்தத்தில் இந்த விதையைப் பத்திரமாகப் பொதிந்து

வையின். இந்த விதை மிக்க அரியதும் பரிசுத்தம் வாய்ந்ததுமாகும். இது ஸகல லோகங்களையும், அவற்றுள் அடங்கிய எல்லா ஜீவராசிகளையும், மற்றுமுள்ள ஸ்தாவரப் பொருள்களையும் உண்டாக்கவல்ல அரிய சக்தி அமைந்துள்ளது. இதற்குச் சிருஷ்டிபீஜம் என்று பெயர்; எனப்புகன்று அந்த அரிய விதையையும் அப்பிரமதேவரிடம் கொடுத்தருளினர்.

பிதாமஹரும் ஸ்ரீமஹா கைலாஸபதியின் ஆக்ஞைப்படி, மஹாமேரு பருவதத்தை அணுகி அதன் தென்பால் ஒரு சிகரத்தின்மீது முற்கூறியவாறு அமிர்தகடம்ஒன்றை அமைத்து அதனுள் அந்தச்சிருஷ்டி பீஜம் என்னும் விதையையும் பொதிந்துவைத்தார். பின்பு அந்த நான்முகனர், அவ்வமிர்த கடத்தின்மீது, மாவிலை, பில்வம், தேங்காய், பூணூல், தர்ப்பை, சந்தனம் முதலியவற்ருல் அலங்கரித்து அதனை ஆங்கு ஒருபுறத்தே ஓர் உறியில் தொங்கவைத்திருந்தனர்.

சில நாட்களுக்கெல்லாம் பிரளயமும் வந்துவிட்டது. உலகமெங்கும் ஒரே வெள்ளம் பரந்தது. வானில் எங்கும் மேகங்கள் சூழ்ந்துகொண்டு பெருத்த இடியோசையுடன் இடையருது மழைபொழிந்தன. சராசரப்பகுதிகள் யாவும் அவ்வெள்ளத்தில் ஆழ்ந்து அழிந்தன. அப்போது பிரமதேவர் மேருமலைச் சிகரத்தின் ஒரு புறத்தே உறியில் வைத்திருந்த முற்கூறிய அமிர்தகடமும், அவ்வெள்ளப் பெருக்கின் இடையே மிதந்து தென்றிசை நோக்கி மெல்லச் சென்றுகொண்டிருந்தது. சிருஷ்டிகருத்தாவும், தமது ஹம்ஸவாகன மீதேறி, அந்த அமிர்தகடத்தைத் தொடர்ந்து செல்வாராயினர்.

இவ்வாறு நாட்கள் பலசெல்ல அந்தப் பெருவெள்ளமும் வர வரக் குறைந்து வற்றத்தொடங்கியது. அதனால் தென்றிசை நோக்கி மிதந்து சென்ற அமிர்தகடத்தின் மீது அலங்கரிக்கப் பெற்றிருந்த தருப்பையும், மாவிலையும் ஓரிடத்தே விழுந்தன. அந்தத்தருப்பை விழுந்த இடத்தே ஒரு சிவலிங்கமும், மாவிலை விழுந்த இடத்தே ஒரு வன்னிமரமும் தோன்றின. பின்பு அந்த அமிர்தகடமும் சிறிது தூரம் சென்றதும் ஓரிடத்தே தங்குவதாயிற்று.

அந்த அமிர்தகடம் தங்கியதைக்கண்ட பிரமதேவரும் மற்ற தேவர்களுடன் ஆங்குவந்து இந்த இடமே உலகிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்கள் யாவற்றிலும் சிறப்புப் பெறுவதாகும். இந்த இடத்தைச்சார்ந்த நாடும் நல்லவளம் பல அமைந்து விளங்கும், என்று புகழ்ந்து அந்த அமிர்தகடத்தின் மீது மலர் மாரி சொரிந்து வாழ்த்தி மகிழ்வாராயினர்.

அவ்வாறு அமிர்தகடம் அங்குத் தங்கினின்றதைக் கண்ட ஸ்ரீ பார்வதிரமணர், தமது பிரமத கணங்கள் சூழ்ந்து வரத்தாம் ஒரு வேட்டுவ வடிவம்தாங்கி நின்று, அவ்விடத்தை நாடிப் புறப்பட்டு வந்தனர். வனசரன் வடிவங்கொண்ட அப்பெருமானார் இப்பொழுது திருவிடைமருதூர் எனப்படும் இடத்திற்கு அருகே வரவும் அவ்விடத்திற்கு மேற்கே தங்கி நின்ற அந்த அமிர்தகடத்தைக் கண்டனர். உடனே அவர், தமது வில்லை வளைத்து, அக்குடத்தின் மீது பலமுறைப் பாணங்களைத் தூண்டினார். ஆனால் அக்கணைகளுள் ஒன்றும் அக்குடத்தை அணுகவில்லை. அதுகண்ட அப்பரமன் சற்று மேற்கே வந்து, ஓரிடத்தில் நின்றுகொண்டு அவ்வமிர்த கும்பத்தின்மீது மறுபடியும் ஓர் அம்பு எவினார். அந்தக்கணை,

சலேரென விரைந்து சென்று, அவ்வமிர்த கடத்தைத்தகர்த் தது. அதனல், அந்தக்கடத்தின் மீது வைக்கப்பெற்றிருந்த தேங்காய், வில்வம், சந்தனம் முதலிய பொருள்யாவும் வானில் எழுந்து பற்பல இடங்களிற் சிதறிவிழுந்தன. அவை விழுந்த இடங்களிலெல்லாம் ஒவ்வொரு சிவலிங்கம் தோன்றி யது. பின்பு அவ்விடங்கள் யாவும் புண்ணிய சிவஸ்தலங்க ளாக ஏற்பட்டன.

அந்த அமிர்தகடம் வாய் பிளக்கப்பட்டு உடைந்தவுடன் அதனுள் இருந்த அமிர்தம் ஐந்து குரோசதூரம் சென்று பரவியது (குரோசம் என்பது இரண்டு மைல் தூரமாகும்) இதனல் இந்த அமிர்தத்தால் நனைந்த இடத்திற்குப் பஞ்சக் குரோச க்ஷேத்திரம் எனப்பெயர் உண்டாயது. பின்பு ஆங்குப்பரவிய அமிர்தம் ஓடி, இரண்டு இடங்களிற் போய்த் தங்கவே அவை இரண்டு தடாகங்களாக நிலைபெற்றன.

அதுகண்ட, அந்தக் கிராதவடிவங்கொண்ட சிவபெரு மான், அந்த அமிர்தகடம் உடைந்துகிடந்த இடைத்தை யணுகினர். அவர், அங்கு அமிர்தத்தால் நனைந்துகிடந்த மண்ணையும், அந்த அமிர்தகடத்தின் துண்டுகளையும் ஒன்று சேர்த்து ஒருலிங்கவடிவமாகச் செய்து, அந்தலிங்கத்தைத் தாமே பூஜித்து, அங்குக்கூடி நின்ற தேவர்கள் சிவகணங்கள் அனைவருங்காண, ஒரு திவ்யவடிவத்துடன் அந்த லிங்கத்தி னுள்ளே மறைந்தருளினர். அந்த லிங்கவடிவமாக அமைந்த மூர்த்தியே ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் எனப்படுவர்.

ஸ்ரீகைலாஸபதி அவ்வாறு அந்த லிங்கத்துள் மறைந்த அதிசியத்தைக்கண்ட தேவர்கள் முதலினேர் மிக்க ஆச்சரிய மடைந்து, "இந்த க்ஷேத்திரமே எல்லா ஸ்தலங்களினும் மேன்மை பெறுவதாகும்" என்று எண்ணி, அந்த ஆதி கும்

பேசுவரரை விதிப்படிப் பூஜித்து மகிழ்ந்தனர். பின்பு அவ்வானவர்கள் உலகம் இனித்தழைந்து நலம்பெற வேண்டி ஸ்ரீஉமாதேவியை அந்த ஆதி கும்பேசுவரருடைய இடது புறத்தில் அந்தச் சிருஷ்டிபீஜம் தங்கிய இடத்தில் எழுந்தருளச் செய்து போற்றிப் பூஜித்தனர். அதனுல், உலகம் தழைந்து ஜீவராசிகள் முதற் பலவும் தோன்றி நிலைபெறுவன ஆயின. அத்தேவி, **ஸ்ரீ மந்திர பீடேசுவரியாய்** விளங்கி நின்று தன்னைத் தெரிசிப்போருக்கு ஸகல மங்களங்களும் உண்டாகத் தன் கருணைததும்பும் கடைக்கண் நோக்கினுல் திருவருள்புரிந்து வருகின்ருளாதலின், அத்தேவிக்கு **ஸ்ரீமங்கள நாயகி** என்று பெயர் வழங்குவதாயிற்று.

மேற் கூறியவாறு அமிர்தகும்பம் வந்து தங்கிய காரணத்தாலே அந்த ஸ்தலத்திற்கு வடமொழியில் **கும்பகோணம்** என்றும், தமிழில் **திருக்குடந்தை** அல்லது குடமூக்கு என்றும் பெயர்கள் உண்டாயின. அந்த அமிர்தம் தங்கிநின்ற இரு தடாகங்களும், பின்பு **பொற்றமரைத் தீர்த்தம்** எனவும், **கன்யா தீர்த்தம்** எனவும் பெயர் பெற்றன.

பின்னர், பிரம்மதேவரும் உலகம் தழைந்தோங்க, ஸ்ரீமங்களாம்பிகை ஸமேதராய் எழுந்தருளியுள்ள **ஸ்ரீ** ஆதி கும்பேசுவரருக்கு ஆலயம் அமைத்து ரதோற்சவம் முதலிய பல திருவிழாக்களை நடத்தி ஆங்கு மகிழ்வுற்றிருந்தனர். அந்தப் பிரமோத்ஸவமே, இப்பொழுது ஆண்டு தோறும் நடைபெற்றுவரும் மாசிமக உற்சவமாகும். இந்த ஆதி கும்பேசுவர க்ஷேத்திரம், சைவசமயாச்சாரியர்களான **திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர்** ஆகிய இருவர்களது தேவாரத் திருப்பதிகங்கள் பெற்றுள்ளது.

# அத்யாயம் 2.

## கும்பகோண க்ஷேத்திரத்தில் உள்ள மற்ற சிவாலயங்கள்.

### 1. நாகேசுவரர் கோயில்.

பிரளயகாலத்தில் மிதந்துவந்த அமுதகடத்தின் மீது இருந்த வில்வம் முற்கூறிய ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் ஆலயத்திற்குத் தென் கிழக்கே சிறிது தூரத்திற்கப்பால் விழுந்தது. அந்த வில்வதளம் விழுந்த இடத்தில் ஒரு வில்வ வனம் தழைந்து விளங்கியது. அந்த வில்வ வனத்தினிடையே ஒரு சிவலிங்கம் தோன்றியது. அந்த லிங்கவடிவமான ஸ்ரீசிவ பெருமானை, ஆதிசேஷன் பலகாலும் ஆராதித்துத் தவம் புரிந்து வந்தான். அவனது தவத்திற்கு மகிழ்ந்து அப்பெருமான் அந்த லிங்கத்தினின்றும் தோன்றிக் காட்சியளித்தருளினார். அப்போது அப்பெருமான் அருளிய வரத்தால் ஆதிசேஷன் ஸகல புவனங்களையும் தனது முடிமீது தாங்கும் வலிமையைப் பெற்றான். இவ்வாறு நாகராஜனான ஆதிசேஷன் வழிபட்டு வந்த காரணத்தினால் அந்த வில்வவனேசுவரருக்கு நாகேசுவரர் என்று பெயர் வழங்குவதாயிற்று. இத்தலமும் தேவாரப் பதிகங்கள் பெற்றதாகும். இதற்குத் தமிழிற் குடந்தைக் கீழ்க்கோட்டம் என்பது பெயர். இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ நடராஜப்பெருமான் திருச்சபை, உலகிலுள்ள விசேஷ நடனசபைகளுள் ஒன்றாகும். இந்த நடராஜமூர்த்தியின்சிறப்புத்தோன்றவே, திருநாவுக்கரசு சுவாமிகளும் "குடந்தைக்கீழ்க் கோட்டத்தெம் கூத்த

ஞரே," என்று தமது திருத்தாண்டகத் திருப்பதிகத்தால் புகழ்வாராயினர்.

இந்த நாகேசுவரர் கோயிலில் சூரிய பகவானுக்கு ஒரு தனி ஆலயம் அமைந்துள்ளது. அந்த பாஸ்கரமூர்த்தி ஆதியில் இந்த நாகேசப்பெருமானைப் பூஜித்து அனுக்ரஹம் பெற்றனராம். வருஷத்திற்கு ஒருமுறை சித்திரை மாதத்தில் இவ்வாலயத்தில் சூரிய பூஜை என்றொரு விசேஷ உற்சவம் நடைபெறுகின்றது. அப்போது மூன்றுநாட்கள் தொடர்ச்சியாக காலையில் சூரிய கிரணங்கள் கோயிற் கீழைவாயிலின் வழியாக நேரே பல மண்டபங்களையும் கடந்து உட்சென்று கருப்பக் கிருகத்திலுள்ள ஸ்ரீ நாகேசுவரரது மூலஸ்தானமாகிய லிங்கத்தின்மீது படுவன காணலாம். இவ்வாலயம் தென்னிந்தியாவிலுள்ள புராதனக் கட்டிடங்களுள் ஒன்றாகும். இவ்வாலயத்திற் பழைய சோழவம்சத்து அரசர்களது சிலாசாஸனங்கள் பல அமைந்துள்ளன. சுவாமி பெயர் **நாகேசுவரர், குடந்தைக் கூத்தர், மடந்தை பாகர்** என்பனவாம். தேவியார் பெயர் **மடந்தை நாயகி** அல்லது **பெரிய நாயகி** என்பன. இந்த நாகேசுவரர் ஆலயத்திலேயே பாம்பாட்டி சித்தர் என்னும் ஒரு பெரிய யோகியும் அடங்கியுள்ளதாகப் பெரியோர் கூறுவர்.

---

## 2. சோமேசுவரர் ஆலயம்.

---

அமிர்தகடம் வைக்கப்பெற்ற உறி ஆதிகும்பேசுவரர் ஆலயத்திற்குக் கிழக்கேயுள்ள பொற்றாமரைத் தீர்த்தத்தின்

கீழ்கரையில் தங்கியது. அவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் தோன்றியது. அந்தச் சிவலிங்கமூர்த்தியை ஸோமதேவன் அதாவது சந்திரன் பலகால் உபாஸித்து வந்து நற்பேறுபெற்ருன். அதனுல் அப்பெருமானுக்குச் **சோமேசுவரர்** அல்லது **சோமநாதர்** என்று பெயர்கள் உண்டாயின. இத்தலமும் ஒரு தேவாரத்திருப்பதிகம் பெற்றதாகும். இச்சோமேசுவரரை **ஏழைச் சோமேசர்** என்றுங் கூறுவதுண்டு. இந்த ஸ்தலம் தேவாரத்தில் **குடந்தைக்காரோணம்** என்று கூறப்படும். **சுவாமி பேயர் சோமநாதர்,**
**தேவி பேயர் தேனுர்மோழியம்மை, மதுசுந்தரி என்பன.**

## 3. பாணபுரீசுவரர் ஆலயம்.

சிவபெருமான் வேடவடிவம் பூண்டு அமிர்தகடத்தின் மீது பாணம் தொடுத்தபோது அவர் நின்ற இடத்தே ஒரு லிங்கம் தோன்றியது. அந்த ஈசனுக்குப் **பாணபுரீசுவரர்** என்றும் அதனைச்சார்ந்த இடத்திற்குப் **பாணபுரி** அல்லது **பாணதுறை** என்றும் பெயர்கள் வழங்கலாயின.

**சுவாமி பேயர் பாணபுரீசுவரர்,**
**தேவி பேயர் சோம கலாம்பாள்.**

## 4. அபிமுகேசுவரர் ஆலயம்.

அமிர்த கடத்தின் மீதிருந்த தேங்காய் முற்கூறிய கன்யாதீர்த்தமென்னும் மகாமக தீர்த்தத்தின் கீழ் கரையில் விழுந்ததுா, அங்கே தோன்றிய லிங்கத்திற்கு **அமிர்தநாதர்**

என்று பெயர் உண்டாயிற்று. பின் அப்பெருமான் கன்யா தீர்த்தமென்னும் மகாமக தீர்த்தத்தை நோக்கி மேற்குமுகமாக இருந்து காட்சியளித்து வருகின்றாராதலின், அப்பெருமானுக்கு **அபிமுகேசுவரர்** என்ற பெயரும் உண்டாயிற்று.

**சுவாமி பேயர் அபிமுகேசுவரர்,**
**தேவி பேயர் அமிர்தவல்லி.**

## 5. கௌதமேசுவரர் ஆலயம்.

அமிர்த கும்பத்தின்மீது அணியப்பெற்றிருந்த பூணூல் விழுந்த இடத்தே தோன்றிய லிங்கத்தைக் கௌதமர் என்ற முனிவர் ஆராதித்து அனுக்ரஹம் பெற்றாராதலின், அப்பெருமானுக்குக் **கௌதமேசுவரர்** என்பது திருநாமமாயிற்று. இந்தக் கௌதமேசுவரர் ஆலயம் மகாமக தீர்த்தத்தின் கரையில் தென்மேற்குப் புறத்தே அமைந்துள்ளது.

**சுவாமிபேயர் கௌதமேசுவரர்,**
**தேவி பேயர் சௌந்தரநாயகி.**

## 6. ஸ்ரீகாசி விசுவேசுவரர் ஆலயம்.

மஹாமக தீர்த்தத்தின் வடகரையில் தீர்த்த தேவதைகளான ஒன்பது கன்னியர்களுடன் ஸ்ரீகாசி விஸ்வநாதரும் ஸ்ரீவிசாலாக்ஷியம்மையும் எழுந்தருளியிருக்கின்றார். இப்பெருமானையும் ஸ்ரீ விசாலாக்ஷியம்மையையும் தெரிசித்து, அங்குள்ள நவ கன்னியர்களைப் பூஜிப்பவர் ஸகல பாபங்களினின்றும், விடுபட்டு நற்கதியடைவர். தருணத்தில் புஷ்ப

வதியாகாத பெண்கள் அந்த நவகன்னியர்களைப் பூஜித்து விருதம் அநுஷ்டிப்பதால் தங்களது தோஷம் நீங்கப்பெற்று மங்கைப் பருவத்தையடைந்து தம் கணவருடன் இன்புற்று வாழ்வர் என்பது பிரத்யக்ஷ அநுபவமாகும்.

ஸ்ரீகாளாஸ்தீசுவரர் கோயில் முதலிய புராணத்திற் கூறப்பெறுதவைகளும் பெரியோர்களால் பிரதிஷ்டை செய்விக்கப் பெற்றவைகளுமான மற்றும் பல சிவாலயங்கள் இந்த க்ஷேத்திரத்தில் ஆங்காங்கு விளங்குவன காணலாம்.

## அத்தியாயம் 3.

## கும்பகோண க்ஷேத்திரத்திலுள்ள ஸ்ரீ சாரங்கபாணி ஆலயம்.

முன்னொரு காலத்தில் பிர்மதேவர் ஸ்ரீமஹாவிஷ்ணுவைக் குறித்துப் பலகாலம் அருந்தவம்புரிந்தனர். ஸ்ரீமந் நாராயணமூர்த்தி அப்பிர்மதேவருக்குக் காட்சியளித்து அவரது வேண்டுகோளின்படி, அவருக்குப் பிரணவாகாரமான, அதாவது, ஓங்கார வடிவமாய் அமைந்த ஓர் அழகிய விமானத்தை அளித்து அதனுள் தம்மைப் பள்ளிகொண்ட கோலமாக வைத்து ஆராதனம்செய்து வருமாறு பணித்தனர். அவ்வாறே அந்நான்முகக் கடவுளும், அவ்விமானத்தைத் தமது இருப்பிடமாகிய ஸத்யலோகத்திற்கு எடுத்துச்சென்று, அங்கு அதில் திருமாலை ஆதிசேஷன்மீது பள்ளிகொண்ட கோலமான உருவில் எழுந்தருளச் செய்வித்துப் பலகாலம் வழிபட்டு வந்தனர்.

பின்னர் ஒரு சமயம் சூரியவம்சத்து அரசர்களுள் ஒருவரும், மிக்க பிரசித்திபெற்ற மன்னருமான இக்ஷ்வாகு என்பவர் பல ஆண்டுகள் பிரமதேவரைக்குறித்துக் கடுந்தவம் புரிந்து அப்பிரமதேவருடைய பூஜையில் இருந்த அப்பள்ளி கொண்ட மூர்த்தியை அந்த விமானத்துடன் வரமாகப் பெற்று அதனைத் தமது ராஜதானியாகிய அயோத்திமாநகரில் எழுந்தருளச்செய்து பூஜித்து வந்தனர். அக்காலம் முதல், அந்தச்சேஷசயன மூர்த்தியே அவ்வேந்தரது பரம்பரையினர்க்குக் குலதெய்வமாக இருந்து அருள்புரிந்து வந்தனர்.

பின்பு அந்த இக்ஷ்வாகு வம்சத்தில் தசரத சக்கரவர்த்தியின் திருக்குமாரராய்த் தோன்றிய ஸ்ரீராமபிரானுர், தம் தேவியாகிய ஸீதாப்பிராட்டியை அபகரித்துச்சென்ற கொடியோனுன இராவணனையும் அவனைச்சேர்ந்த அரக்கர்களையும் ஸம்ஹரித்துப் பின் திருவயோத்தியில் மகுடாபிஷேகம்செய்து கொண்டனர். அந்த ரகுநந்தனர் அச்சமயம் பட்டாபிஷேக மகோற்சவத்தைக்கண்டுகளிக்க ஆங்கு வந்திருந்தவனும், தமக்குள்ள துணைவனும், இராவணனது தம்பியுமான விபீஷண ஆழ்வானுக்கு, தமது குலதெய்வமாக விளங்கிவந்த, அந்தப் பாம்பணையிற் பள்ளிகொண்ட பரஞ்சுடரான மூர்த்தியை, அவ்விமானத்தோடு ஒரு வெகுமதியாக அளித்தனர். விபீஷண ஆழ்வான் தான்பெற்ற பாக்யத்தை நினைந்து மனக்களிப்புற்றேனுகி; அந்த விமானத்தை எடுத்துக்கொண்டு தனது நாடாகிய இலங்கை நோக்கிப் புறப்பட்டனன். செல்லுங்கால், அந்த அரக்கர்கோன், வழியின் இடைப்பட்ட காவிரிநதியின் மத்தியிலுள்ள ஒரு மணல்திட்டில் அந்த விமானத்தைச் சற்றுக்கீழேவைத்தனன். உடனே அவ்விமானம்

அவ்விடத்தைவிட்டுப் பெயர்த்தெடுக்கமுடியாமல் அங்கேயே நிலைபெற்றது. அந்த விமானம் தங்கிய இடமே இப்பொழுது **ஸ்ரீரங்கம்** எனப்படும் க்ஷேத்திரமாகும். அதனால் அந்தச் சேஷசயன மூர்த்திக்கு **ஸ்ரீரங்கநாதர்** என்ற பெயர் உண்டாயிற்று.

இதனாலன்றோ, கல்வியிற் பெரியாரும், கவிச்சக்கரவர்த்தியுமான தெய்வப்புலமை ஆழ்வார் ஸ்ரீகம்பநாடர், தாம் இயற்றிய **இராமாவதாரம்** என்னும் காப்பியத்தில் ஜனக ராஜர் ஸபையில் விசுவாமித்ரர், ஸ்ரீராமபிரானுடைய முன்னோர்களான அரசர்களுது சரித்திரங்களைக் கூறுமிடத்து,

" பிணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி
மணியரங்க நெடுமுடியாய் மலரயனை வழிபட்டுப்
பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண
அணியரங்கந் தந்தானை அறியாதார் அறியாதார். "

என்று அந்த இக்ஷ்வாகுவின் பெருமையையும், ஸ்ரீரங்கநாதருடைய மகிமையையும் பாராட்டுவாராயினர். நிற்க :—

ஒரு சமயம் பிருகு என்னும் முனிவர் ஸ்ரீமகாவிஷ்ணுவைக்காண விரும்பி, க்ஷீராப்திக்குச்சென்றனர். அவ்வேளை, திருமால் ஸ்ரீ லக்ஷ்மிதேவி தமது மலரடிகளை வருடப் பன்னக சயனத்தின்மீது இனிது அமர்ந்திருந்தார். அப்பரமன் அந்த பிருகு ரிஷியினது வரவைக் கவனிக்கவில்லை. அதனால் அம் முனிவர் திருமால் தம்மை அவமதித்ததாக மதித்து, வெகுண்டு, விரைந்து வந்து, அப்பெருமான் மணிமார்பில் தமது காலால் உதைத்தனர். திருமால் முனிவரது அச்செய்கைக்குச் சிறிதுங் கோபங்கொள்ளாது, எழுந்து நின்று பல

இதமொழிகள் கூறி அவரது கோபத்தை ஆற்றிச் சமாதானஞ் செய்தனுப்பினர்.

இந்த விபரீத நிகழ்ச்சியைக்கண்ட ஸ்ரீதேவி, கோபமும், வருத்தமும் மேலிட்டுத் தன் நாதனுரை நோக்கி; "ஹே! ஸ்வாமி! இது என்ன அக்கிரமம்! இந்த ரிஷி உங்களுடைய திருமார்பில் உதைக்கும்படியான அவ்வளவு அகம்பாவம் பெற்றது என்னே? உங்களுடைய மணிமார்பம் எனக்கினிய வாஸஸ்தானமல்லவா? நீங்கள் உடனே அந்த ரிஷிக்குத்தக்க தண்டனை விதிக்கவேண்டும். அன்றேல், நான் இனிச்சற்று நேரமும் இங்கு இருக்கமாட்டேன்;" என்று படபடப்புடன் கூறினள்.

திருமாலோ, தேவியின் அந்தப் பதட்டமொழிகளைக் கேட்டும், கேளாதவர்போல் இருந்துவிட்டனர். அதனைக் கண்ட திருமாது, அவர் தன்னை அவமதித்ததாகக் கருதிப் பின்னும் அதிகமாகச்சினந்து அவ்விடம் விட்டு அகன்றனள்.

அகன்ற அப்பூமகள் பற்பல இடங்களிலும் அலைந்து திரிந்து பின் தான்செய்த பிழையினை எண்ணியெண்ணி வருந்துவாளாயினள். ஆதலின், அம்மலர் மங்கை தான் செய்த பிழைபொறுத்தருளவேண்டித், திருமாலைக்குறித்துத் தவம்செய்யும் பொருட்டுப் பூலோகத்திற்கு வந்தனள்; அவள் இத்திருக்குடந்தை நகரையடைந்து, ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் ஆலயத்திற்கு எதிரே அமைந்துள்ள, அமிர்தவாவியில் தோன்றிய ஒரு பொற்றாமரை மலர்மீது ஒரு சிறு பெண்மணியாய் விளங்கினள். இதற்கிடையே, பிருகு முனிவரும், கோபத்தால் தாம் ஆராயாது செய்த குற்றத்தை நினைந்து, மனம்

வருந்தி அக்குற்றத்தினின்றும் தம்மை விடுவித்துக்கொள்ளக் கருதினர். மேலும், அம்முனிவர், தாம் உலகிற்பிறந்து ஸ்ரீலக்ஷ்மி தேவியையே பெண்ணாக அடைந்து, அப்பெண்ணைத் தாமே அத்திருமாலுக்குத் திருமணம் செய்விக்கவும் விரும்பினர். அதனால் அம்மஹருஷி, பூமியில் ஓர் அந்தணர் குலத்திற்பிறந்து ஹேமருஷி என்ற பெயருடன் விளங்கினர். பின்பு அந்த ஹேமருஷி யென்னும் முனிவர் திருக்குடந்தைப்பதியையணுகி, அமுதவாவியின் வடகரையில் இருந்து அருந்தவம்புரிந்து வந்தனர். தவம்செய்து வந்த அம்முனிவர் மேற்கூறியவாறு ஒரு நாட் காலை அத்தடாகத்தின் இடையே பொன்னிறமான ஓர் அழகிய தாமரை மலர்ந்திருந்ததையும், அதனிடையே ஓர் அழகிய சிறுபெண் விளங்கியதுங்கண்டு, அதனருகேசென்று அப்பெண்ணை எடுத்துவந்து அவளுக்குக் **கோமளவல்லி** என்று திருநாமமிட்டுத் தம்மகளே போல அன்புடன் பாராட்டி வளர்த்து வருவாராயினர். அப்பெண்மணியும் அம் முனிவரையே தனது தந்தையென எண்ணித் தவ நியமத்திலேயே இருந்தனள். சில ஆண்டுகள் சென்றன.

இவ்வாறு ஹேமருஷியும் கோமளவல்லியென்னும் அப்பெண்மணியும் அருந்தவம் இயற்றிவருவதை உணர்ந்த திருமால், அவ்விருவருக்கும் திருவருள்புரியத் திருவுளங்கொண்டனர். ஆதலின் அப்பரமன், ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திலுள்ள, தமது பிரணவாகார விமானத்திலிருந்து, ஒளிவீசுங் கிரணங்களைக்கொண்டு அதன் அம்சமாக மற்றொரு விமானத்தைச் சிருஷ்டித்து, அதனுள் சார்ங்கம் என்னும் வில்லை யேந்திய திருக்கரத்தினராக அமர்ந்து, காவிரிநதியின் வழியே புறப்

பட்டு வந்து திருக்குடந்தை நகரில் உள்ள முற்கூறிய அமிர்த வாவியை அடைந்தனர். அப்பொழுது அந்த விமானத்தி னின்று வீசிய ஒளியால் அவ்விடம் கோடி சூரியர் உதித்தாற் போல தேஜோமயமாய் விளங்கியது. தேவர்களும், முனிவர் களும் அந்த அதிசயக் காட்சியைக்கண்டு, ஆனந்த மடைந்து பலவித வாத்தியங்களை முழக்கியும், அந்த விமானத்தின்மீது மலர்மாரி பொழிந்தும் அப்பரந்தாமனைப் புகழ்ந்து வாழ்த்து வாராயினர்.

ஹேமருஷியும், கோமளவல்லியென்னும், அப்பெண்மணி யும், தங்கள் எதிரே தோன்றிய தெய்வ விமானத்தையும், அதனுள் விளங்கிய சார்ங்கபாணியாகிய பரஞ்ஜோதியையும், கண்டு பரவசமுற்றோராய் வணங்கி நின்றனர். அத்திருமா லும் அவர்கள் பால் திருவருள் சுரந்து அவர்கள் செய்த குற் றங்களைப் பொறுத்தருளினர். பின்னர் அப்பரமன் அம் முனிவரது விருப்பப்படியே அக்கோமளவல்லியென்னும் ஸ்ரீ தேவியை, ஸகல தேவர்களும் மற்றோருங் கண்டுகளிகூரத் திருமணம்புரிந்து கொண்டனர். திருமணக்கோலத்துடன் அங்கு விளங்கிய அந்த எம்பெருமானது திருமேனியின் அழ கைக் கண்டோர் கண்கள், கண்டு அமைதியை அடையவில்லை. ஆதலின், அங்குக் குழுமி நின்ற வானவர் முதலிய அனை வரும், காணத் தெவிட்டாத அமுதமென்ன விளங்கிய அப் பெருமான் திருவுருவைக்கண்டு, அவருக்கு **ஆராவமுதன்** என்று திருநாமமிட்டனர். அந்த ஹேமருஷியும் பின் அப் பரமன் திருவருளால் ஸ்ரீவைகுந்த வாழ்வை அடைந்தனர்.

பின்பு அந்தச் சார்ங்கபாணிப் பெருமானும், உலகில் உள்ள ஜீவகோடிகளுக்கு, என்றும் திருவருள் புரியவேண்டி

அந்த விமானத்தோடு அந்த அமிர்தவாவியின் கீழ்புறத்தே பள்ளிகொண்ட திருவுருவத்துடன் விளங்குவாராயினர். அந்த அமிர்த வாவியினிடையே பொற்றாமை மலர் தோன்றியதாதலின் அந்தத் தடாகத்திற்குப் பொற்றாமரைத் தீர்த்தம் என்று பெயர் வழங்கி வருகின்றது. அப்பொற்றாமை வாவியின் வடகரையில் விளங்கும் ஹேமருஷி மண்டபம் என்பதே அம்முனிவர் இருந்து தவஞ்செய்து வந்த இடமாகும்.

தைமாஸம் உத்தராயண புண்ணிய காலமாகிய மகர ஸங்கிரமண காலத்தில் அங்குச் சார்ங்கபாணி யென்னும் அப்பெருமான் தோன்றிக் காட்சியளித்தருளினாராதலின், அந்த மகரஸங்கிரமண புண்ணியகாலத்தில் (அதாவது பொங்கற் புதுநாள் என்னும் தைமாதப்பிறப்பில்) அப்பொற்றாமரை வாவியில் ஸ்நானஞ்செய்து ஸ்ரீகோமளவல்லித் தாயாரையும், சேஷசயனத்தின்மீது பள்ளிகொண்ட கோலமாய் விளங்கும் ஸ்ரீசார்ங்கபாணியென்னும் ஆராவமுதப்பெருமானையும் தெரிசித்து வணங்குவோர் இகபரபோகங்களைப்பெற்று இன்புறுவர்.

---

## அத்தியாயம் 4.

---

இந்த ஆராவமுதப் பெருமானைத் திருமால் அடியார்களுள் சிறந்த ஆழ்வார்களிற் பலர் நாலாயிர திவ்யப்பிரபந்தத்திற் புகழ்ந்து பாடியுள்ளார்கள். அப்படிப் பாடிய ஆழ்வார்கள் பெரியாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை

யாழ்வார், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார் என்னும் அறுவர் ஆவர்.

திருமழிசை ஆழ்வார் என்னும் பெரியார் இந்நகரிலுள்ள முற்கூறிய ஸ்ரீசார்ங்கபாணிப் பெருமான் ஸந்நிதியை அடைந்து அவரைத் தெரிசனம் செய்தனர். அப்பெருமான் பள்ளிகொண்ட திருக்கோலத்தைக் கண்டதும், மெய்மயிர் பொடித்து ஆனந்த பரவசராகித் **திருச்சந்த விருத்தம்** என்னும் பிரபந்தத்தால் புகழ்ந்தனர். அப்போது அவர்,

"நடந்த கால்கள் நொந்தவோ நடுங்கஞால மேனமாய்
இடந்தமெய் குலுங்கவோ இலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்தகாவிரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து பேசுவாழி கேசனே"

என்று பாடியவுடன்; பள்ளிகொண்ட அப்பரஞ்சுடர் சிறிது எழுந்து தலைநிமிர்ந்து ஆழ்வாரை நோக்கியருளினர். இப்பொழுதும் அப்பரமன் அத்திருமழிசையாழ்வார்க்குக் காட்சி அளித்தருளிய வண்ணமே நிமிர்ந்து நோக்கும் திருமுக மண்டலத்துடனே விளங்குகின்றனர். இவ்வாறு சயனித்திருப்பதை, **உத்யோகசயனம்** என்பர் பெரியோர்.

இவ்வாறு பெருமான் தமக்குத் திருவருள் செய்த இந்த திருக்குடந்தை நகரிலேயே அத்திருமழிசை யாழ்வார் ப[illegible] காலம் யோகத்தில் வாழ்ந்து வந்து பின் இத்தலத்திலேயே முக்தியடைந்தனர் என்பர். இத்திருமழிசைப் பெருமானுக்குச் சாத்தாரத்தெரு என்னும் வீதியில் ஒரு ஆலயம் விளங்குவது காணலாம்.

இனி, இச்சார்ங்கபாணி பெருமாள் கோயிலும் இதன் அயலேயுள்ள சோமநாதர் கோயில் என்னும் சிவாலயமும் ஒரே கட்டிடத்தில் இருந்ததென்றும், பின் தஞ்சை ஸமஸ்தானத்தை ஆண்ட விஜயநகரத்து நாய்க்க மன்னர்கள், வைஷ்ணவப்பற்று மிகுதியுடையவர்கள் ஆதலின், அம்மன்னருள் ஒருவரால் இப்பொழுது உள்ளவாறு இச்சார்ங்கபாணிப் பெருமாள் கோயில் பெரிதாகத் தனியே கட்டப்பட்டது என்றும் தெரியவருகின்றது. இதற்கேற்ப, இந்தச் சார்ங்கபாணிப்பெருமாள் விமானத்தின் சுற்றுச்சுவர்களில் அந்த நாய்க்க வம்சத்தரசர் காலத்துச் சாஸனங்கள் பல விளங்குவன காணலாம். இதனால் சோமேசுவரர் கோயில் முன்னிருந்ததைவிட அளவிற் குறைந்து போயிற்றென்றும் இக்காரணம் பற்றியே அந்தச் சோமேசுவரருக்கு **ஏழைச் சோமேசர்** என்று ஒருபெயர் வழங்கிவருகின்றது என்றும் சொல்வர்.

இந்த ஆராவமுதப்பெருமானது சித்திரைத் திருநாளில் நடைபெறும் ரதோற்சவம் மிக்க சிறப்புடைத்தாகும். இந்த ரதம் தென்னிந்தியாவில் உள்ள பெரிய ரதங்களுள் ஒன்றாகும். இதற்குச் **சித்திரைத்தேர்** என்றே பெயர் வழங்குகின்றது. இந்தத் திருத்தேரில் **ஸ்ரீ** ஆராவமுதன் எழுந்தருளிக் காட்சியளித்தருளும் பெருமையில் ஈடுபட்டே திருமங்கை மன்னன் என்னும் ஆழ்வாரும், **திருவெழுகூற்றிருக்கை** என்றும் ஒரு ரதபந்தனச் சித்திரப்பாசுரம் பாடியுள்ளார்.

## அத்தியாயம் 5.

## இந்தக்ஷேத்திரத்தில் உள்ளமற்ற விஷ்ணு ஆலயங்கள்.

### 1. ஸ்ரீசக்ரபாணிக்கோயில்.

---

இந்தக் கும்பகோண க்ஷேத்திரத்தில் முன் பிரமதேவர் பலகாலம் வஸித்து வந்தார் என்று கூறப்பட்டதன்றோ? அப்போது ஒரு சமயம் ஸ்ரீமகாவிஷ்ணு, காலநேமி என்னும் கொடிய அசுரனைக்கொல்லவேண்டித் தமது சக்ராயுதத்தைத் தூண்டினர். அவ்வாழிப்படை, அந்தக் காலநேமியை மாய்த்துவிட்டு, இந்நகரக் காவிரித்துறையில் ஸ்நாநம்செய்து கொண்டிருந்த பிர்மதேவர் கரத்தின்மீது வந்து அமர்ந்தது. அதுகண்ட நான்முகக் கடவுள், வியப்புற்று அந்த ஸுதர்சனம் என்னும் தெய்வப்படையை அக்காவிரியின் அருகேயிருந்த ஒரு அரசமரத்தின் அடியில் பிரதிஷ்டைசெய்து பூஜித்து வந்தனர். ஒருநாள் சூரியன் தன்னினும் ஒளியில் மேம்பட்டவர் இல்லையென்று செருக்குற்று, வானவீதியின் வழியேசென்று கொண்டிருக்கையில், தன்னினும் பல்லாயிரங் கிரணங்களோடு தேஜோமயமாய்ச் சுடர்விட்டு விளங்கிக் கொண்டிருந்த இந்தத் திருஆழி ஆழ்வான் திருவுருவைக் கண்டனன். கண்ட ஆதவன், முன்னினும் பலமடங்கு கர்வமேலிட்டு, தன் ஒளியைப்பெருக்குவதானன். அந்தச் சுதர்சனமும் அவ்வாறே தன்னொளியையும் விருத்திசெய்து கொண்டது. இவ்வாறு சூரியன் ஒளியும் சக்கரத்தொளியும் வரவரப் பெருகத்தொடங்கவே, உலகம்யாவும் அந்த உஷ்ணத்தைத் தாங்காமல் வெப்பத்தால் பெரிதும் வருந்தத் தொடங்கின.

இந்த விபரீத சம்பவத்தைக் கண்ட தேவர்கள், சூரியனிடம் ஓடிவந்து, "ஹேபானுவே! இப்படிப்போட்டி மேலிட்டு உலகங்களை வருத்துவது அழகன்று. உனக்கு எதிரியாக உள்ளதோ ஸ்ரீமந்நாராயணரது ஸுதர்சனம் என்னும் ஆழியாகும். ஆதலால், நீ அடங்கிப் போதலே தகுதியுடைத்தாகும்;" என்றனர். அவ்வாறு தேவர்கள் இதத்தை எடுத்துக்கூறிப் பலவாறு வேண்டிக்கொண்டும், சூரியன் தன் அகம்பாவத்தை விடவில்லை. அதுகண்ட தேவர்கள் வேறு வழியின்றி அந்தச் சக்கரத்தாழ்வான் அருகேசென்று, "ஹே! சுதர்சனமே! ஆதவனே அறிவிழந்து உன்னை எதிர்த்தனன். அவன் உன்முன் எம்மாத்திரம்? ஸமுத்திரம் அலைபுரண்டு வரும்போது சிறுவாய்க்கால் என்செய்யும்? ஆதலால், வீண் கர்வங்கொண்டுள்ள இந்தச் சூரியனை ஒரு பொருட்டாக மதியாது எங்கள்மீது அருள்புரிந்து உனது அகோரமான இந்த வெப்பத்தைத் தணித்துக்கொள்ளவேண்டும்;" என்று இரந்து கேட்டுக்கொண்டனர்.

தேவர்களுடைய அந்த வேண்டுகோளைக்கேட்டு அவ்வாழிப்படை தனது சினந்தணிந்து தன் ஒளியையும்வெப்பத்தையும் சிறிது சிறிதாகத் தன்னுள் அடக்கியது. அவ்வாறு அந்தச் சுதர்சனம் தன் ஒளியைத் தன்னுள்ளே அடக்கியபோது அது, தன்னெதிரே நின்ற சூரியனது ஒளியையும் தன்னுள் இழுத்துக்கொண்டது. அதனால் அந்த ஆதவன், தன் ஒளி முழுவதையும் இழந்து வட்டவடிவமான ஒரு கரும்பலகை போல நின்றனன். மூவுலகும் கொடிய தாபத்தினின்றும் விடுபட்டு இன்பமுற்றது. சூரியனும் தனக்கு நேர்ந்த அவமானத்தினால் வெட்கமுற்று அகம்பாவம் ஒழிந்து வருந்தி நின்றனன்.

பின்பு அக்கதிரோன் தன் ஒளியைமீண்டும் பெற விரும்பி, ஸ்ரீசார்ங்கபாணிப் பெருமான் ஸந்நிதியையடைந்து, தன் குறைகூறிப் பணிந்து அருள்புரிய வேண்டினன். ஆராவமுதனும், "ஹே! ஆதவ! நீ அறிவின்றி அகம்பாவமடைந்தாய், அதனால் உனக்கு இந்த விபரீதம் ஏற்பட்டது. இனி நீ அந்தச் சக்கராஜனையே சரணமடைந்து உனது குற்றத்தைப் பொறுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள் பின் அச்சக்கரத்தின் இடையே நம்மை ஆவாகனம்செய்து விதிப்படிப் பூஜைசெய்;" என்று ஆக்ஞாபித்தனர்.

அவ்வாறே சூரியனும், அவ்வாழிப்படையை அணுகி வணங்கிச் சரணடைந்து, அதன் நடுவே ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து பலகாலம் வணங்கி வரவே, அவன் ஒளியும் வளர்ந்து முன்னை உருவையடைந்தனன். சூரியன் சக்கரத்தினிடையே ஆவாகனம்செய்து பூஜித்து வந்த மூர்த்தியே **ஸ்ரீசக்ரபாணி** யென்னும் பெயருடன் விளங்குகின்றனர். இந்தச் சக்ரபாணியென்னும் மூர்த்தி அஷ்டபுஜங்களுடன் ஸ்ரீருத்ராம்சமாக விளங்குகின்றார். ஆதலின் இப்பெருமானுக்கு இங்கு மற்ற விஷ்ணு ஸந்நிதிகளில் நடப்பன போல் அல்லாமல், ஸ்ரீருத்ரதேவர்க்கு உவப்பான குங்குமார்ச்சனைகளும், பில்வார்ச்சனைகளும் இன்றும் நடைபெறுகின்றன. மேலும், மற்ற விஷ்ணு ஆலயங்களில் உள்ளவாறன்றி, இங்குத் தாயார் சந்நிதியும் இடது புறத்தே அமைந்துள்ளதும் நோக்கத்தக்கது. இந்தச் சக்ரபாணிப்பெருமானைப் புகழ்ந்து ஆழ்வார்கள் பாடவில்லையென்று கூறுவர். ஆனால் இத்தலத்திலேயே வாஸம்செய்து வந்த திருமழிசை ஆழ்வார் என்னும் பெரியார், தமது திருச்சந்த விருத்தம் என்னும் பிரபந்தத்தில்,

1494888
-600 008.

"தூய்மை யோக மாயினாய் துழாய் அலங்கல் மாலையாய்
ஆமையாகி ஆழ்கடல் துயின்ற ஆதிதேவநின்
நாமதேய மின்னதென்ன வல்லம் அல்லவாகிலும
சாமவேத நேரனாய சக்ரபாணி யல்லையே."

என்ற ஒரு பாசுரத்தால் இந்தச் சக்ரபாணிப் பெருமாள் விஷயமாக மங்களாசாசனம் செய்துள்ளார் என்பது பெரியார்களது அபிப்பிராயமாகும். பிர்மதேவர் காவிரித்துறையில் நீராடுங்கால் அவரது திருக்கரத்தே மேற்கூறிய சக்கரப்படை தோன்றியது ஆதலின், அந்தக் காவிரித்துறைக்குச் சக்ர தீர்த்தம் என்ற பெயர் உண்டாயிற்று.

## ஸ்ரீராமஸ்வாமி கோயிலும் மற்ற விஷ்ணு ஆலயங்களும்.

கும்பகோணக்ஷேத்திரத்தில் ஸ்ரீசாரங்கபாணிக்கோயில் வீதியின் தென்மேற்கில், அதாவது கடைவீதியின் தென் கோடியில் ஸ்ரீராமஸ்வாமி ஆலயம் ஒன்று விளங்குவது காணலாம். இவ்வாலயம், ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன் இந்தத் தஞ்சை சமஸ்தானத்தை ஆண்டுவந்த நாயக்கர் அரசர் காலத்தில் அவர்களுக்கு அமைச்சராக இருந்த கோவிந்த தீக்ஷிதர் என்னும் ஒரு மஹானால் கட்டப்பட்டதாகும். மேலும் இந்நகரில், லக்ஷ்மிவராகப்பெருமாள், கோபாலகிருஷ்ணர், வரதராஜர் ஆகிய பல விஷ்ணுமூர்த்திகளுக்கும் தனித் தனியே ஆலயங்கள் அமைந்துள்ளன காணலாம்.

Q22'38.2119510
N32

## அத்தியாயம் 6.

## மஹாமகம் என்னும் மஹோத்ஸவமும் அந்த தீர்த்த விசேஷங்களும்.

இந்தக் கும்பகோண க்ஷேத்திரதின் பெருமைக்குக் காரணம் பல உளவேனும் மஹாமகம் என்ற மஹோத்ஸவமே அதன் பிரஸித்திக்கு முக்கிய காரணம் என்னலாம்.

ஒவ்வொரு வருஷமும் மாசிமாதம் மகநக்ஷத்திரம் கூடும் புண்ணிய காலமே மாசிமகத்திருநாள் என்னும சுபதினமாகும். ஆனால், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வியாழபகவான் அதாவது குரு, சிங்கராசியில் சஞ்சரிப்பார். அக்காலே சூரியன் கும்பராசியில் இருக்க, சந்திரனும் குருவும் ஒன்றுசேர்ந்து விளங்கும் காலமே மஹாமகம் என்னும் மஹாபுண்ணிய காலமாகும். இந்த விசேஷகாலத்தை, **தெக்ஷிண தேச மஹாமேளா** என்று கூறுவது பொருத்தமுடையதாகும். மஹாமகம் என்னும் இந்தத்தீர்த்தாடனத் திருநாள், இந்தக் கும்பகோண க்ஷேத்திரத்தில் நடைபெறுவதற்குக் காரணங்கூறுவாம்.

முன்னொருகாலத்தில் தீர்த்த தேவதைகளான நவகன்னியர்கள் ஸ்ரீ கைலாஸத்தில் சிவபெருமான் ஸந்நிதியை அடைந்து, "ஸ்வாமி! நாங்கள் பூவுலகில் தங்களுடைய நியமனப்படி மஹாநதிகளாக விளங்கிவருகின்றோம். எல்லோரும் எங்களிடம் வந்து ஸ்நானம் செய்து, அவர்கள் செய்த பாவங்களை யெல்லாம் எங்களிடத்தே சுமத்திவிட்டுப்

போய் விடுகின்றனர். யாங்கள் அப்பாவச்சுமைகளைத் தாங்கி மிகவும் அலுத்துப்போய்விட்டோம். அதனால், எங்கள் பரிசுத்தத்தன்மையும் வரவரக் குறைந்து வருகின்றது. இனி எவ்வாறு நாங்கள் எங்கள்பால் நிறைந்துள்ள பாவங்களினின்றும் நீங்கி புனிதமாவோம் என்பது தெரியவில்லை. தேவரீர், குற்றமற்றவர்களான எங்கள் குறைகளை நீக்கி, அனுக்ரஹிக்க வேண்டும்,'' என்றுபணிந்து விண்ணப்பம்செய்துகொண்டனர்.

அதுகேட்ட ஸ்ரீ கௌரீசர், புன்னகை தவழுந்திருமுக மண்டலத்துடன், "ஹே! தீர்த்த கன்னியர்களே! நீங்கள் கவலையுறவேண்டாம்! உங்கள் பால் சுமந்துள்ள பாவங்களைப் போக்க ஒரு மார்க்கம் உண்டு, கேண்மின்! தக்ஷிணதேசத்தில் ஸ்ரீ கும்பகோணம் என்றொரு திவ்யக்ஷேத்திரம் விளங்குகின்றது, அங்கு **அமிர்தவாவி** என்று புண்ணிய தீர்த்தம் உளது. அந்த க்ஷேத்திரத்தில் நாம் நமது தேவியுடன் பல பல இடங்களில் மூர்த்திகரித்து விளங்குகின்றோம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பிரகஸ்பதி ஸிம்ஹராசியில் சஞ்சரிப்பார். அவ்வருஷம் கும்பமாஸத்தில் வரும் மக நக்ஷத்திரத்தன்று **மஹாமகம்** என்னும் புண்ணியகாலமாகும். அந்த மஹாமகமும் இப்பொழுது ஸமீபத்தில்வரப்போகிறது. அதலின், நீங்கள் அவ்விடத்தை யடைந்து அந்தப் புண்ணிய காலத்தில் அங்குள்ள அமிர்தவாவியில் ஸ்நானம் செய்வீரேல், உங்களைப்பற்றியுள்ள பாவங்கள் அனைத்தும் நீங்கும். நீங்கள் பரிசுத்தமாவீர்;'' என்று அனுக்ரஹித்தனர்.

அதனைக்கேட்ட அந்த நதிதேவதைகளான கன்னியர்கள் "பிரபோ! அபலைகளாகிய எங்கள்மீது கருணை கூர்ந்து தேவ

நீரே எங்களை அந்தத் திவ்ய க்ஷேத்திரத்திற்கு அழைத்து போகவேண்டும்;" என்று வேண்டிக்கொண்டனர். பசுபதியும், "நீங்கள் காசி க்ஷேத்திரத்திற்குப் போய் இருங்கள்! நாம் உங்களை அழைத்துச் செல்லுகின்றோம்," என்று கூறினர். அக்கன்னியர்களும் அப்பெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு அக்கயிலையை விட்டு நீங்கி ஸ்ரீ காசிமாநகரம் அடைந்து அங்குள்ள, ஸ்ரீ விசாலாக்ஷி ஸமேத ஸ்ரீ விஸ்வநாதஸ்வாமியைப் பணிந்து ஆராதித்து வந்தனர். சில காலஞ்செல்ல, ஸ்ரீ பரமேச்வரர் காசி விசுவநாதர் உருவத்தோடும், தேவி விசாலாக்ஷி உருவத்தோடும், விளங்கி அத்தீர்த்த கன்னியர் முன் தோன்றி, அவர்களை அழைத்துக்கொண்டு அந்த மஹாமக புண்ணிய காலத்தன்று கும்பகோண க்ஷேத்திரம் வந்து சேர்ந்தனர். அன்று, அங்குள்ள ஆதி கும்பேசுவரர் முதலாகிய எல்லா மூர்த்திகளும் அந்தத் தீர்த்தத்தின் அருகேவந்து காட்சியளித்தனர். அவ்வேளை, அந்த நதிதேவதைகளான ஒன்பது கன்னியர்களும் அந்த மஹாமக தீர்த்த வடகரையில் உள்ள ஸ்ரீ காசி விச்வேசுவரர் ஆலயத்தில் விளங்குகின்றனர். பின்பு, அந்தத் தீர்த்தகன்னியர்களும், திக்பாலர்களும், பிர்மதேவரும், அந்த அமிர்தவாவியிலேயே தங்கள் பெயரால் ஒவ்வொரு தீர்த்தங்களை ஸ்தாபித்து, அவற்றில் ஸ்நானம் செய்வோருக்குப் பல நலன்களை அளித்து வருகின்றனர்.

இந்தத் தீர்த்த கன்னியர்கள் படிந்த காரணமாகவே அந்த மஹாமக தீர்த்தத்திற்குக் கன்யாதீர்த்தம் என்ற பெயரும் உண்டாகியது. மஹாமக தீர்த்தத்தில் உள்ள பற்பல புண்ணிய தீர்த்தங்களைக்காட்டும் படம் அடியில் விளங்குவது காணலாம்.

உ

## கும்பகோணம்

# மஹாமக தீர்த்தப் படம்

வடக்கு காசிவிஸ்வேசுவர் ஆலயம்.




தெற்கு கௌதமேசுவரர் ஆலயம்.

## மஹாமகக் குளத்திலுள்ள
# தீர்த்தங்களின் விவரங்கள்.

இந்திர தீர்த்தம் :- ஸ்வர்க்கலோக வாழ்க்கை அளிக்கும்.

அக்னி தீர்த்தம் :- பிர்மஹத்தி முதலான பாவங்களை பஸ்மீ [கரமாக்கும்.

எம தீர்த்தம் :—எமபடர் துயரைத்தவிர்க்கும்.

கிருதி தீர்த்தம் :- பூதப்பிரேத பிசாசதோஷங்களை விலக்கும்.

வருண தீர்த்தம் :- ஆயுளை விருத்திசெய்யும்.

வாயு தீர்த்தம் :— பிணிகளைப் போக்கும்.

குபேர தீர்த்தம் :- ஸகல ஸம்பத்துக்களையும் அருளும்.

ஈசான தீர்த்தம் :- சிவஸாயுஜ்யம் அளிக்கும்.

ஸரஸ்வதி தீர்த்தம் :-ஞானத்தை விருத்திசெய்யும்.

கோதாவரி தீர்த்தம்:-இஷ்டஸித்திகளை அளிக்கும்.

காவேரி தீர்த்தம் :- புருஷார்த்தங்களை அருளும்,

கன்யாகுமரி தீர்த்தம்:- அஸ்வமேதபலனைத் தரும்.

மஹாநதி தீர்த்தம் :- திடகாத்திரத்தை அருளும்.

பயோஷ்ணி தீர்த்தம் பாலாறு :- கோலோகத்தை அளிக்கும்.

ஸரயூ தீர்த்தம் :— மனக்கவலைப்போக்கும்.

கங்கா தீர்த்தம் :— ஸ்ரீ கைலாஸபதவியை அளிக்கும்.

யமுனா தீர்த்தம் :- ஸ்வர்ணத்தை விருத்தியாக்கும்.

பிர்ம்ம தீர்த்தம் :— பிதுர்க்களை நற்கதியில் ஏற்றும்.

66-கோடி தீர்த்தங்கள் :- உலகிலுள்ள ஸகல தீர்த்த ஸ்நான பலன்களையெல்லாம் அளிக்கும்.

## மஹாமக ஸ்நான விருத நியமங்கள்.

### இந்த விருதம் மஹாமக புண்ணியகால தினத்திற்கு ஐந்து நாட்கள் முன்னதாகவே தொடங்கப் பின்வருமாறு அனுஷ்டிக்கவேண்டும்.

---

முதல்நாள் :— பிர்மசாரி, கிருஹஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி, ஆகிய நான்கு ஆச்சிரமத்தில் உள்ளவர்களும், கன்யா தீர்த்தம் என்னும் மஹாமக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யத்தகுதியுள்ளவராவர். ஆதலின் அவர்கள் ஸ்நானம் செய்து பஞ்சகவ்ய முண்டு, பிராமண சமாராதனை செய்து, குரு பூஜையை இயற்றி, ஒருவேளை அமுது உண்டு, ஸ்தலபுராணத்தைப் பக்தியுடன் படித்தலோ அல்லது கேட்டலோ செய்து பின் தரைமீது சயனித்தல் வேண்டும்

இரண்டாம்நாள் :— பிராதஸ்நானம், மாத்தியான்ஹிக ஸ்நானம், தேவதர்ப்பணம், பிராமணஸமாராதனை, ஒருவேளை போஜனம், தரைமீது படுத்தல் ஆகிய, நியமங்களைச் செய்ய வேண்டும்.

மூன்றும்நாள் :— பிராதஸ்நானம், தீர்த்த தேவதைகளின் அனுக்கிரகபூஜை நவகன்னியர்கள்பூஜை, முறங்களில் சந்தனம், புஷ்பம், குங்குமம், தாம்பூலம், ரவிக்கை, தீர்த்த மத்தியில் போட்டு நீராடுதல், ஒன்பது கன்னியர்களுக்கு மேற்கூறியவாறு தனித்தனியே ஒன்பது முறங்களில் சந்தனம், குங்குமம், புஷ்பம், தாம்பூலம், ரவிக்கை, இவற்றை தக்ஷிணையுடன் வைத்து கொடுத்துப் பின் அவர்களுக்குப் போஜனமளித்தல், பிறகு ஆதி கும்பேசுவரர், சாரங்கபாணி

முதலிய தேவாலயங்களுக்குச் சென்று பிரதக்ஷிண நமஸ்கார ங்கள் அர்ச்சனை முதலிய ஆராதனங்களைச்செய்து ஒருவேளை உணவுடன் தரையில் சயனித்தல் வேண்டும்.

நான்காநாள் :— பிதுர்தேவதைகளை உத்தேசித்து சங் கல்பம், தலைமட்டும் க்ஷவரம் செய்துகொள்ளுதல், சுவர்ண தானம் செய்தல், பால் பழம் மட்டும் உண்டு தரையில் படுத் திருத்தல் ஆகியவற்றை நியமத்துடன் அனுஷ்டித்தல் வேண் டும்.

ஐந்தாம்நாள் :— பிதுர்தேவதைகளைக் குறித்து பிண்டம் கொடுத்து தீர்த்தசிரார்த்தம் செய்தல். பிராமண ஸமாராதனை செய்தல், இவற்றால் விரதமுடிவு அடையும். இந்த மஹாமக புண்ணியகாலத்தை உத்தேசித்து வருஷ ஆரம்பத்திலேயே ஸகலதீர்த்தங்களும் தேவர்களும் இந்த க்ஷேத்திரத்தில் வந்து தங்கியிருக்கின்றார்கள். ஆதலின், வேறு க்ஷேத்திரங்களில் செய் யப்படும் தானதர்மங்கள் பலன்களைத்தருவதில்லை. மேலும் இவ்வருஷத்தில் சௌளம், உபநயனம், விவாஹம் முதலிய சுபகாரியங்களையும், நடத்தக்கூடாதென்பது பெரியோர்களது அபிப்பிராயமாகும்.

## அத்தியாயம் 7.

## ஸ்ரீ காவேரி மாஹாத்மியம்.

ஆதிகாலத்தில் இந்தச்சோழமண்டலத்தை **அரித்துவசன்** என்றசோழமன்னன் ஒருவன் ஆண்டுவந்தான். இவ னைக் **கவேரசோழன்** என்றும்சொல்வதுண்டு. இவ்வேந்தன் காலத்தில் ஒருசமயம் பலஆண்டுகள் தொடர்ந்து மழையில்லா

மல் போகவே நாட்டிற் பெரும்பஞ்சம் உண்டாயிற்று. அத னால் குடிகள் பசி, பிணி முதலியவற்றால் பெரிதும் இடர்ப் பட்டனர். மன்னுயிரையெல்லாம் தன்னுயிரினும் மேலாகக் கருதிய அக்காவலன் தன் நாடுபடுந் துயரைக்கண்டு, மனம் பொறுது வருந்தினன். ஆதலின், அவ்வேந்தன் மேற்குத்தொ டர்ச்சிமலையின் ஒரு பகுதியாகிய சையகிரியில் இருந்து தவம் செய்து வந்த அகஸ்தியர் என்னும் அருந்தவமுனிவர் ஆச்ர மம் அடைந்தனன். அங்கு அம்மன்னவன் அம்முனிவர் பெருமான் அடியிணைகளில் வணங்கி நின்று, தன் நாடு நீர் வளம் பெருகித்தழைக்கும்படி, அருள்புரிய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனன்.

முனிபுங்கவரும் சுயநலம் கருதாத அவ்வேந்தனது வே ண்டுகோளுக்கு இணங்கி முன் தமது குண்டிகையில் பிரம லோகத்திலிருந்து கொண்டுவந்து வைத்திருந்த **விஷ்ணுமா** **யை** என்னும் தெய்வதீர்த்தத்தை அம்மலைச் சிகரத்தின் ஒரு புறத்தே கவிழ்த்தனர். அது தெய்வத் தன்மைவாய்ந்த புண் ணியதீர்த்தமாதலின் ஒருநதியாகப் பெருகிக் கிழக்குநோக்கி ஓடிவந்து சோழநாட்டிற் பிரவேசித்து அதனை வளப்படுத்திக் கொண்டுவந்தது. கவேரராஜன்கொண்டுவந்ததால் அந்நதிக்குக் காவேரி என்று பெயர் உண்டாயிற்று. கவேரராஜனும் மனம் மகிழ்ந்தோனாகி, அந்நதியின் முன்னே வந்துகொண்டிருந்த னன். இவ்வாறு பெருக்குடன் வந்த அந்நதி கும்பகோண க்ஷேத்திரத்திற்கு மூன்றுமைல் மேற்கேயுள்ள திருவலஞ்சுழி என்னுமிடத்தை அணுகியதும் அவ்விடத்தே எழுந்தருளி யுள்ள கபர்த்தீச்வர என்னும் சிவபெருமானை வலம்வந்து

ஆங்கிருந்த பெரும் பிலம் ஒன்றில் நுழைந்து மறைந்துவிட்டது. அவ்வெள்ளப்பெருக்கில் ஒரு திவலைகூட வெளியே வரவில்லை.

என்ன கஷ்டம்! சோழமன்னனுக்கு அப்போது உண்டான மனவருத்தத்தை என்னென்றுரைப்பது! "வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி தகர்ந்ததுபோல, நதி தந்நாடு முழுவதும் பரவிக்கடலில் கலக்கு முன் மாயமாய் மறைந்துவிட்டதே! இனி எவ்வாறு இதனைப்பெறுவேன்!" என்று வருந்துவானாயினன்.

அப்போது அவ்விடத்திற்கு அருகேயுள்ள **ஏரண்ட வனம்** என்னும் கொட்டைச் செடிகள் அடர்ந்தகாட்டில் ஆத்ரேயர் என்னும் ஒரு ரிஷி தவம் செய்துகொண்டிருந்தனர். எரண்டவனத்தில் இருந்தாராதலின் அம்முனிவர்களுக்கு ஏரண்டமஹரிஷி என்று பெயர் வழங்குவதாயிற்று. அம்முனி புங்கவரே **ஆத்ரேயர்** என்னும் மகரிஷி ஆவர். அம்முனிவர் பெருமான் வேந்தன் துயரை உணர்ந்து அவனிடம் அணிகி, "வேந்தனே! இந்தப்பிலத்தில் மணிமகுடம் அணிந்த மன்னனாவது, ஜடாமகுடம் புனைந்த ஒரு தவசியாவது புகுவரேல், இது மூடிப்போகும். பின் இந்நதியும் நேரே, செல்லும்," என்றனர்.

அதனைக்கேட்ட அரசன், தன் தேச க்ஷேமத்திற்காகத் தான் அந்தப் பிலத்துள் விழுந்து தன் ஆவி துறப்பதே மேல் என்று துணிந்து, அப்பிலத்தினுட் புக முன்வந்தனன். அதனைக்கண்ட அம்முனி புங்கவர், அவனது தன்னலமற்ற பரோ

பகாரத்தன்மைக்கு வியந்து அவனைக் கொண்டாடியதோடு, அப்பிலத்துள் விழுவதினின்றும் அவனை விலக்கி, அவன் எதிர்பாராதவண்ணம் தாமே கடுகிச்சென்று அப்பிலத்தினுள் நுழைந்தனர். அந்த முனிவரது துணிகரச் செய்கையைக் கண்ட அரசனும் மற்றையோரும் வியந்து மனம் வருந்தி நின்றனர்.

பின்னர் சற்றுநேரத்திற்கெல்லாம் அக்காவிரிநதி கிழக்கே மூன்றுமைல் தூரத்திற்கப்பால் அம்முனிவருடன் மேலே கிளம்பியது. அந்த நதி மேற்கிளம்பிய இடமே மேலைக்காவேரி என்னும் இடமாகும். காவிரி முனிவருடன் மேற்கிளம்பியது கண்ட சோழன், இழந்ததனம் பெற்றவனேபோல மனம் மகிழ்ந்து அம்முனிவர்பெருமான் கருணைத்திறத்தை வியந்து அவரது மலரடிகளை வணங்கி விடைபெற்றுக் கொண்டு அக்காவிரிநதியுடன் சென்றனன். அது பற்பல க்ஷேத்திரங்களின்வழியே பாய்ந்தோடிக் கடலிற்கலந்தது. அந்தக்காவிரி நீர்ப்பெருக்கினால் சோழமண்டலமும்,வளம்பெற்று ஓங்கியது. இக்காவேரி தீர்த்தத்தின்மீது படிந்து வருங்காற்று வீசும் இடங்களில் வாஸஞ் செய்பவர் அனைவரும் பாவங்களினின்று விடுபட்டவராகி ஸத்கதியடைவரென்றால் இப்புண்ணிய நதியில் நீராடுவோர் பெருமையை உரைக்க ஒண்ணுமோ? அடியில் வரும் பாடல்கள் இந்த மஹாநதியின் பெருமையை ஒருவாறு விளக்கும்.

கங்காநதி முதலாகிய
கடவுள் நதி பலவும்
கங்காய் விணைதவிர்ப்பாயெனி
நாடும் நதி யெதுவேல்

அங்காரண வும்சோலைகல்
அழகார் வயலிடையே
சிங்கார மிலங்கத் தவழ்
திருக்கா விரி யன்றே. 1

தேன் பாகினும் இனிதாம் தமிழ்
செழி சோழநன் ஞட்டில்
தான் பாய்ந்துயர் வள்மோங்கவே
தவழ்மாநதி யெதுவேல்
கோன்மாறினும் குடிமாறினும்
கோள் மாறினும் குன்ரு
வான்மாறினும் தான்மாறிலா
வளர் காவிரி யன்றே. 2

கன்னற்பயிர் கதலிப்பயிர்
கதிராலினி தோங்கு
செந்நெற்பயிர் முதலாம் பல
செழிக்கச் செய்யும் நதிதான்,
மன்னன்திரு வளவன் நெடு
வளநாடு வளர்க்கும்
அன்னையென ஆன்ரோர்புகழ்
அணி காவிரியன்றே. 3

கும்பகோண க்ஷேத்திரத்தில் காவேரி நதியில் உள்ள விசேஷ தீர்த்தத் துறைகளாவன.

1. காசியப தீர்த்தம் :- சோலையப்பமுதலித் தெரு கீழ்கோடியில் உள்ள துறை.

2. கதா தீர்த்தம் :- பழைய ஓடத்துறை (புதியபாலத்திற்கு மேற்கேயுள்ளது.)

3. சக்கர தீர்த்தம் :- சக்ரபாணி தீர்த்தம் கொடுக்கும் மண்டபத்துறை.

4. பகவத் தீர்த்தம் :- ஸ்ரீ சங்கராசாரியார் மடத்துக் கருகேயுள்ள கட்டிடம்.

மேலும் இந்தக்ஷேத்திரத்தில் வராகப்பெருமாள் கோயில் பின்புறமுள்ள வராகதீர்த்தமும், அரிசிலாற்றில் உள்ள பிர்ம்ம தீர்த்தத் துறையும், நாகேசுவரர் கோயிலில் உள்ள சிங்கக் கிணறு என்னும் நாகதீர்த்தமும், சோமேசுவரர் ஆலயத்தில் விளங்கும் பாதாளகங்கை என்னும் கூபமும்(கூபம் = கிணறு) விசேஷ தீர்த்தங்களாம்.

---

## அத்தியாயம் 8.

## பஞ்சக்குரோச யாத்திரையும் அதனைச் சேர்ந்த சில க்ஷேத்திரங்களும்.

---

அமிர்தகடம் தகர்க்கப்படவே அதிலிருந்த அமிர்தம் அங்கிருந்து ஐந்து குரோச விஸ்தீர்ணம் (அதாவது பத்து சதுரமைல் தூரம்) பரவியது. இந்தப் பிரதேசத்தில் பல க்ஷேத்திரங்களும், புண்ணிய தீர்த்தங்களும் அமைந்துள்ளன. இந்த க்ஷேத்திரங்களுக்குப் பிரதக்ஷிணமாகச் சென்று ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் ஆடியும் மூர்த்திகளைத் தெரிசித்தும் வருவதே பஞ்சக்குரோச யாத்திரை எனப்படும். இந்த யாத்திரை செய்வோர்கள் பூர்வ ஜன்மபாபங்களினின்றும்

விடுபட்டவர்களாகி, இஷ்டஸித்திகளைப் பெறுவதோடு இயம பயத்தினின்றும் நீங்கி ஸாயுஜ்ய பதவியையும் அடைவர். இந்த பஞ்சக்குரோச க்ஷேத்திரங்களின் விசேஷங்களைக் கூறுவாம்.

## 1. மத்யார்ஜ்ஜுனம் (திருவிடைமருதூர்.)

மத்யார்ஜ்ஜுனம் அல்லது திருவிடைமருதூர் என்னும் க்ஷேத்திரம் கும்பகோணத்திற்கு கிழக்கே நான்கு மைல் தூரத்தில் உள்ள ரயில்வே ஸ்டேஷன் உள்ள ஊராகும். ஆதிகாலத்தில் இவ்விடம் அர்ஜுன விருக்ஷங்கள் என்னும் மருதமரங்கள் அடர்ந்த ஒரு காடாக இருந்தது. இந்த்வனத்திலிருந்து முன் **விபாண்டகர்** என்னும் ஒரு மகரிஷிக்கு ஸ்ரீபரமேசுவர் தமது அர்த்தநாரீசுவரத் திருவுருவத்துடன் காட்சியளித்தருளினார். மேலும், இந்த மருதவனத்திலிருந்து காசிபமுனிவர் செய்த தவத்திற்கு மகிழ்ந்து ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்ரீ பாலகிருஷ்ண வடிவத்துடன் நின்று காட்சியளித்தருளினர் இவ்வாறு ஹரனும் ஹரியுமாகிய இரு மூர்த்திகளும் மருத விருக்ஷத்தின் இடையே தோன்றி அருள் புரிந்தமையால் இத்தலம் வடமொழியில் மத்யார்ஜ்ஜுனம் என்றும் தமிழில் இடைமருதூர் என்றும் பெயர் பெறுவதாயிற்று. இங்குக் கோயில் கொண்டெழுந்தருளிய லிங்க வடிவமான சிவபெருமானுக்கு, **ஜோதிர்மய மஹாலிங்கம்** என்பதும் **மருதீசர்** என்பதும் பெயர்கள். தேவியின் பெயர் **பிரகத் ஸுந்தரகுசாம்பாள்** என்பதாம். இங்கு உமாதேவியார் சிவபிரானைக்குறித்து மோனவிருதத்துடன் தவம் செய்து அப்பெருமானைத் திருமணம் செய்து கொண்டனள் ஆதலின்

இங்கு ஸ்ரீமகாலிங்க மூர்த்தியும், அம்பிகையும் கல்யாணத் திருக்கோலமாக அமர்ந்துள்ள இவ்வாலயத்திற்குவடபுறத்திலுள்ள காவேரித்துறைக்குக் கல்யாணதீர்த்தம் என்று பெயர். இந்தக் கல்யாண தீர்த்தத்தில் தைமாஸம் பௌர்ணமியும், புஷ்ய நக்ஷத்திரமும் கூடிய புண்ணியகாலத்தில் சூரியன் உச்சியில் விளங்கும் அபஜித் முகூர்த்தம் என்னும் மாத்யாந்நிக காலத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியைத் தெரிசிப்போர்கள், பிர்ம்மஹத்தி, சித்தப்பிரமை முதலிய மஹாதோஷங்களினின்றும் விடுபட்டு நற்கதியடைவர்.

மேற்கூறிய மகாலிங்கமூர்த்தியின் ஸந்நிதிக்கு அருகில் உள்ள தடாகம் காருண்யாமிர்த தீர்த்தம் எனப்படும். இதில் மேஷசங்கிரமண புண்ணியகாலத்தில் ஸ்நானம்செய்தல் விசேஷபலன்களை அளிக்கும். இவையன்றி, இந்த க்ஷேத்திரத்தின் வாயுமூலையில் ஒருபுண்ணிய தீர்த்தமும் உள்ளது. அதில் வைசாகஸ்நானம் செய்தோர் இஷ்டஸித்திகளைப் பெறுவர். இந்த க்ஷேத்திரத்தில் மிகப்புராதன காலமுதல் தைமாஸம் நடைபெறும் புஷ்யோத்ஸவமும், அவ்வுத்ஸவ முடிவில் புஷ்ய நக்ஷத்திரத்தில் மேற்கூறிய காவிரித்துறையில் உள்ள கல்யாணதீர்த்தத்தில் நீராடலும் பிரஸித்திபெற்ற திருநாட்களாகும். இதனுலன்றே, சைவசமயாசாரியர்களுள் தலைவரும் தேவாரம் பாடிய மூவருள் ஒருவருமாகிய ஸ்ரீ திருஞானஸம்பந்தமூர்த்தி சுவாமிகள் இத்தலத்தையணுகிய ஆனந்தமேலீட்டால், "வாசங்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே, தேசம் புகுந்தீண்டியொர் செம்மையுடைத்தாய் பூசம்புகுந்தாடிப் பொலிந்தழகாய ஈசனுறைகின்ற இடைமருதீதோ" என்று

இப்பூசத்திருநாளின் சிறப்பைப் புகழ்வாராயினர். இவ்வாலயத்தில் மேற்கூறிய பிரம்மோத்ஸவத்தில் நிகழ்வுறும், ரதோத்ஸவம் மிக்க சிறப்புடையது. இவ்வாலயத்துத் திருத்தேர் தென்னிந்தியாவில் சிறப்புற்ற மஹாரதங்களுள் ஒன்றாகும். இங்கு வைகாசியீ நடைபெறும் திருக்கல்யாண உற்சவமும், விசேஷ சிறப்புடையதே இங்கு வரகுணபாண்டியன், சோழராஜன் இவர்களது பிரம்மஹத்தி தோஷங்கள் நீங்கியது. இத்தலத்தில் முற்றும் துறந்த **பட்டினத்தார்** என்ற பெரியோரும், அவரது சீடரான **பத்ரகிரியார்** என்ற அரசரும் பல காலம் வஸித்து வந்தனர்.

## 2. திருப்புவனம்.

இது திருவடைமருதூருக்கு மேற்கே உள்ள ஒருபெரிய சிவக்ஷேத்திரமாகும். திருவிடைமருதூரில் பிரம்மஹத்திதோஷத்தினின்றும்விடுபட்ட சோழமன்னனது மனநடுக்கத்தைத் தவிர்த்து அருளினாதலின், இங்குக் கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமானுக்குக் **கம்பஹரேசுவரர்** என்று திருநாமம் வழங்கி வருகின்றது. இவ்வாலயத்தில் சரபமூர்த்தி எழுந்தருளியிருப்பது காணலாம்.

## 3 திருநாகேசுவரம்.

கும்பகோணத்திற்கும், திருவிடைமருதூருக்கும் இடையே **திருநாகேசுவரம்** என்றொரு ரயில்வே ஸ்டேஷனுக்கு

ஒரு மைல் தெற்கே உள்ள க்ஷேத்திரமே திருநாகேசுவரம் என்பதாம். இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானைக் குறித்து, **ஆதிசேஷன்** ஆயிரம் ஆண்டுகள் தவம்செய்து பூஜித்து வந்தான். அந்த நாகராஜனால் அங்கு **நாகவாவி** என்று ஒரு தடாகமும் அமைக்கப் பெற்றுள்ளது. அப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து நாகேஸ்வரரைத் தெரிசிப்போர்க்குச் சிவஸாயுஜ்யம் உண்டாகும். இங்கு சூர்யபுஷ்கரணி, தர்மதீர்த்தம் என வேறு இரண்டு புண்ணிய தீர்த்தங்களும் உண்டு. இந்தச் சிவாலயம் தென்னிந்தியாவிலுள்ள பெரிய ஆலயங்களுள் ஒன்றாகும். இவ்வாலயம், கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டிற் சிறப்புற்றோங்கிய **அநபாயகுலோத்துங்கன்** என்னும் சோழசக்கரவர்த்தியின், அமைச்சர் தலைவராக விளங்கியவரும், தமிழிற் **பெரியபுராணம்** என்னும் சிவனடியார்களது திவ்ய சரித்திரங்களை இயற்றி உபகரித்தவருமான **சேக்கிழார்** நாயனார் என்னும் பெரியாரால் கட்டப்பெற்று அவருடைய மேற்பார்வையில் இருந்ததென்றும் தெரிகின்றது இத்தலமும் தேவாரப்பதிகங்கள் பெற்ற சிவக்ஷேத்திரங்களுள் ஒன்றாகும். சுவாமிபெயர் **நாகேசுவரர்**. தேவி பெயர் **கிரிகுசாம்பிகை**.

---

## 4. ஒப்பிலியப்பன் கோயில்.

---

திருநாகேசுவர க்ஷேத்திரத்திற் கருகே தென்பால் முன் மார்க்கண்டேய மகருஷி **துளஸீவனம்** ஒன்று அமைத்து **ஸ்ரீமந்நாராயணரை** பூஜித்துத் தவம்செய்து வந்தனர் அம்

போது ஒருசமயம், ஸ்ரீ லக்ஷ்மிதேவி அந்தத் துளஸீவனத்திடையே ஓர் அழகிய சிறுபெண்ணாகத் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அதுகண்ட அம்முனிவர் அப்பெண்ணை யெடுத்து அன்போடு வளர்த்துவந்தனர். பின்பு திருமால் ஆங்கு ஒரு வேதியர்வடிவுடன் வந்து அப்பெண்ணை மணந்து, தமது ஒப்பில்லாத அழகிய திருவுருவுடன் விளங்கி அம்மார்க்கண்டேய முனிவர்க்குக் காட்சி தந்தருளினார். அதனால் அங்கு எழுந்தருளியுள்ள திவ்ய மூர்த்திக்கு **ஒப்பிலியப்பன்** என்று பெயர் வழங்குவதாயிற்று. மார்க்கண்டேய முனிவர், கருடாழ்வார், தர்மதேவதை, காவேரி முதலினோர் இத்தலத்தில் வந்து அருள் பெற்றுள்ளார்கள்.

இங்கு இப்பரமன் கல்யாணத் திருக்கோலத்துடன் விளங்குகின்றார். ஆதலின், பலர் இந்த ஒப்பிலியப்பன் ஸந்நிதியில் வந்து விவாகம் உபநயனம் முதலிய முகூர்த்தங்களை நடத்துவது வழக்கம். மேலும், திருவேங்கடம் என்னும் திருப்பதியில் உள்ள பெருமானுக்குச் செய்யக்கருதிய பிரார்த்தனைகளை இப்பெருமான் ஸந்நிதியிலேயே வந்து செய்வதும் உண்டு. இப்பெருமானைச் சிரவண நக்ஷத்திரத்தில்வந்து தெரிசிப்போர் ஸகல ஸம்பத்துக்களோடு இஷ்ட பூர்த்தியையும் அடைவர் இந்த க்ஷேத்திரம் தமிழில் திருவிண்ணகரம் என்று பெயர் பெறும். இத்தலம் நம்மாழ்வார், திருமங்கைமன்னன், பொய்கை ஆழ்வார், பேயாழ்வார் ஆகிய நால்வர்களால் மங்களாஸாஸனம் பெற்றதாகும்.

ஸ்வாமி பெயர் ஒப்பிலியப்பன்—ஸ்ரீனிவாஸன்.

## 5 குடவாயில்.

ஸ்ரீ பரமேசுவரர் கிராதவடிவங் கொண்டு அமிர்தகடத்தின்மீது அம்பு தொடுத்தபோது அவ்வம்பு அந்த அமிர்த கடத்தைத் தகர்த்ததென்று முன்னம் கூறப்பட்டதன்றோ? அந்தப்பாணம் பட்ட விசையால் அமிர்த கும்பத்தின் வாய் தகர்க்கப்பட்டு அது வானில் எழுந்து தென்கிழக்கு மூலையில் சென்று விழுந்தது. அந்தக் குடத்தின் வாய் விழுந்த இடத்தே ஒரு சிவலிங்கம் தோன்றியது. அமிர்த குடத்தின் வாய் விழுந்த இடமாதலின் அவ்விடத்திற்குக் குடவாயில் என்ற பெயர் உண்டாயிற்று. குடவாயில் என்பதே இப்பொழுது குடவாசல் என்று மருவி வழங்குகின்றது. இத்தலமும் தேவாரப்பதிகம் பெற்ற க்ஷேத்திரமாகும்.

சுவாமி பெயர்:- கோணேசுவரர்.

தேவி பெயர்:- பிரகந்நாயகி

## திருக்கலய நல்லூர். (சாக்கோட்டை)

இது கும்பகோணத்திற்குத் தெற்கே 2-மைல் தூரத்தில் அரிசில் ஆற்றங்கரையில் உள்ள க்ஷேத்திரமாகும். ஸ்வாமி பெயர் அமிர்தகலாநாதர். தேவி பெயர் அமிர்தவல்லி. இது சுந்தரமூர்த்திசுவாமிகள் பாடிய தேவாரத் திருப்பதிகம் பெற்ற ஸ்தலம். ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் ஸப்தஸ்தான உற்சவத்தில் எழுந்தருளும் ஏழு தலங்களில் இஃது ஒன்றாகும்.

சோழ மன்னர்களுள் ஒருவன் கும்பகோணத்திற்கு அருகே தனது இருப்பிடங்களில் ஒன்றை அமைக்க எண்ணி இவ்வூரில் ஒரு கோட்டையும் அதனுள் தனக்கு வேண்டிய மாளிகைகளையும் கட்டி முடித்தனன். அந்தக்கோட்டையில் அவ்வேந்தன் நூதன கிருகப்பிரவேசமாக அக்கோட்டை வாயிலைக் குறுகியதும், அவன் ஏறி வந்த பட்டத்து யானை கால் இடறி கீழேவிழுந்து இறந்தது. அந்தச் சகுனத்தடையைக்கண்ட சோழ மன்னன் அக்கோட்டையைச் சாவுக்கோட்டை என்றுகூறி அதனுட்புகாது அப்புறம் அகன்றனன். அக்காரணம் பற்றியே அவ்வூருக்குச் சாக்கோட்டை யென்றே பெயர் வழங்குவதாயிற்று.

---

## திருக்கருக்குடி (மருதாநல்லூர்)

---

இத்தலம் மேற்கூறிய சாக்கோட்டை யென்னும் திருக்கலயநல்லூர், என்னும் க்ஷேத்திரத்திற்கு 1½-மைல் தெற்கேயுள்ளது. இது சம்பந்தமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்ற சிவஸ்தலமாகும். சுவாமி பெயர் **சற்குண லிங்கேஸ்வரர்** தேவி பெயர் **சருவாலங்காரமின்னம்மை**. இங்குள்ள எம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வார் எமபாதையினின்றும் விடுபடுவர்.

---

## ருத்ராக்ஷவனம் (தாராசுரம்)

---

இது கும்பகோணத்திற்கு ஒரு மைல் மேற்கே உள்ள க்ஷேத்திரம், இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு இயமன் பல நாள் தவஞ்செய்து இங்கு எழுந்தருளியுள்ள சிவபெரு

மானைப் பூஜித்து, வரம் பெற்றான். இந்த இயமன் தனது பெயரால் இயம தீர்த்தம் என்ற ஒரு தடாகத்தையும் உண்டாக்கினான். ஆவணிமீ அமாவாஸையன்று இயமனுக்கு ஈசன் அருள் புரிந்தார் ஆதலால், அன்று அங்குள்ள இயம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அங்குள்ள சிவ பெருமானைப் பூஜிப்பது விசேஷம். துர்வாஸமுனிவர் சாபத்தால் தனது வெண்ணிறத்தை இழந்த ஐராவதம் என்னும் தெய்வ யானை இங்கு வந்து மேற்கூறிய இயமதீர்த்தத்தில் நீராடிச் சிவபெருமானைப் பூஜித்துத் தனது பழைய வெண்மை நிறத்தை அடைந்தது. ஐராவதம் பூஜித்தமையால் இங்குள்ள சிவபெருமானுக்கு **ஐராவதேசுவரர்** என்ற பெயரும் உண்டாயிற்று. இங்குத் தாரான் என்றோர் அசுரன் ஈசனைப்பூஜித்து அருள் பெற்றான். அதனால் இத்தலம் தாரேசுவரம் என்ற பெயர் பெற்றது. **தாரேசுவரம்** என்பதே தாராசுரம் என்று திரிந்து வழங்குகின்றது. இத்தலத்தில், மேற்கூறிய தாரன் மைந்தன் மேகதாரன் என்பவனும் இச்சிவபெருமானைப் பூஜித்து அருள் பெற்றான். இத்தலத்தில் அன்னதானம் செய்தால் அதற்குப் பலன் அதிகம் என்று சொல்லப்படுகிறது இங்குப் பலர் அன்னதானம் செய்து நற்கதி பெற்றதாக இத்தலபுராணம் கூறுகின்றது. இக்காரணம் பற்றியே முன் இந்நாட்டை ஆண்ட அரசர் இங்கு அன்னசத்திரம் அமைத்துள்ளார்.

சரித்திரவாயிலாக நோக்குமிடத்து இங்குள்ள ஆலயம் மூன்றாம் குலோத்துங்கன் என்னும் சோழசக்கரவர்த்தியாற் கட்டப்பெற்றது என்று அறிகிறோம். அவ்வேந்தன், இத்த

லத்திற்கு இரண்டாம் ராஜ ராஜன் என்னும் தனது தந்தை பெயரால் இராஜ ராஜேசுவரம் என்று பெயரிட்டனன் என்பர் சரித்திராசிரியர்கள். இந்த ஆலயம் நம் இந்து அபூர்வமான சிற்பநுட்பங்களை யுடையதாகும். இவ்வாலயம், இப்பொழுதுள்ளபடி யல்லாமல், முன் பல பிராகாரங்களையுடையதாக இருந்ததென்றும், இக்கோயிலைச் சுற்றிப் பல பெரிய விதிகளும் அமைந்திருந்தன வென்றும் தமிழ் நூல்களால் அறியப்படுகின்றது.

இங்குக் கோயிலின் வாயிலில் உள்ள துவாரபாலக விக்ரஹம் ஆயிரம் வருஷங்களுக்கு முன் நடந்த மேலைச்சளுக்கிய யுத்தத்தில் துங்கபத்திரை என்னும் நதிக்கரையில் வெற்றி பெற்ற **விஜயராஜேந்திர சோழன்** என்னும் சோழ சக்கரவர்த்தியால் அம்மேலைச்சளுக்கிய நாட்டிலிருந்து இட்டுக் கொண்டுவரப்பட்டது என்பது, அந்த விக்ரஹத்தின் அடியிற் பொறித்துள்ள சாஸனத்தால் அறியலாம். இக்கோயில் தஞ்சாவூரில் உள்ள பெரிய கோயிலின் அமைப்பை ஒத்ததாகும். சுவாமி பெயர் ஐராவதேசுவரர். தேவி பெயர் பெரிய நாயகி

---

## திருவலஞ்சுழி.

---

ஆதியில் சோழமன்னனால் சையகிரியிலிருந்து கொண்டு வரப்பெற்ற காவேரிநதி இத்தலத்தை யடைந்ததும், இங்கு எழுந்தருளியுள்ள **கபர்த்தீசுவரர்** என்னும் லிங்கவடிவமான சிவபெருமானை வலமாக வந்து ஆங்கிருந்த ஒரு பிலத்தினுள்

சுழித்துக்கொண்டு புகுந்ததாதலின், இத்தலத்திற்குத் திரு வலஞ்சுழி என்றும், சுவாமிக்கு வலஞ்சுழிநாதர் என்றும் பெயர்கள் உண்டாயின. இத்தலம் திருநாவுக்கரசர், திரு ஞானசம்பந்தர் ஆகிய இருவர்களது திருப்பதிகங்களைப் பெற்றுள்ளது. இக்கோயிலின் முன்னேயுள்ள விநாயகர் மிக்க வரப்பிரஸாதியாவர். இத்தலம் கபிலர், பரணர் ஆகிய பழைய தமிழ்ச் சங்கத்துப் புலவர் பெருமக்களால் சிறப்பித்துப் பாடப் பெற்றதாகும். சுவாமி பெயர் வலஞ்சுழிநாதர், கபர்த்தீசுவரர் என்பன. தேவி பெயர் பெரிய நாயகி. இதுவும் ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் ஸப்தஸ்தான ஸ்தலங்களுள் ஒன்றாகும்.

---

## சுவாமிமலை.

---

இது கும்பகோணத்திற்கு வாயு மூலையில் நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இத்தலம் மேற்கூறிய திருவலஞ்சுழியென்னும் தலத்திற்கு அருகே காவிரியின் வடகரையில் உள்ளது. இங்குச் சிவபெருமானுக்குக் குமாரக்கடவுள் பிரணவப்பொருளை உபதேசித்தருளினர். இத்தலம் குமாரக் கடவுளின் ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகும். இதற்குத் திரு வேரகம் என்று ஒரு பெயரும் உண்டு. சுவாமியாகிய சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை உபதேசித்தார் ஆதலின், இந்தக் குமாரக்கடவுளுக்குச் சுவாமிநாதன் என்ற பெயர் உண்டாயிற்று. கார்த்திகைமீ பௌர்ணமையிலும் தைமீ பூச நக்ஷத்திரத்திலும் இங்குள்ள காவிரித்துறையாகிய குமாரதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்வாமிநாதனைத் தெரி

றிப்போர் இஷ்டஸித்திகளைப் பெறுவர். இத்தலம் நக்கீரதே வர் திருமுருகாற்றுப்படை என்னும் நூலாலும், அருணகிரி நாதர் திருப்புகழ் பாக்களாலும் பாராட்டப்பெற்றதாகும். இது தென்னிந்தியாவிலுள்ள பெரிய யாத்திரை ஸ்தலங்க ளுள் ஒன்று. இத்தலமும், ஆதிகும்பேசுவரருடைய ஸப்தஸ் தான ஸ்தலங்களுள் ஒன்றாகும்.

---

## கொட்டையூர் (ஏரண்டவனம்)

---

இத்தலம் மேலைக்காவிரிக்கு அடுத்து மேற்கேயுள்ள சிவ ஸ்தலம். ஆதியில் கொட்டைச் செடிகள் அடர்ந்த வனமாக இருந்ததால் இது கொட்டையூர் என்று பெயர் பெற்றது. இதற்கு வடமொழியில் ஏரண்டவனம் என்று பெயர். இங்கு ஆத்ரேயரிஷி அல்லது ஏரண்டமுனிவர் தவம் செய்து இங்குள்ள சிவபெருமானை வழிபட்டுவந்தார். மார்க்கண்டே யர் பூஜைசெய்த ஸ்தலங்களுள் இதுவும் ஒன்றாகும் இங் குள்ள சிவபெருமான் லிங்கவடிவின்மீது பலாக்காயின் மேற் புறம் போலப் பல முட்கள் அடர்ந்திருப்பன காணலாம். ஒவ்வொரு முள்ளும் ஒரு லிங்கம் என்று கூறுவர். அதனால் இப்பெருமானுக்கு கோடிலிங்கம், கோடீசுவரர் எனப் பெயர்கள் வழங்குகின்றன. கோயிற் பிராகாரத்தில் உள்ள கிணறு கோடி தீர்த்தம் எனப்பெயர் பெறும். இத்தலத் தில் இருந்த ஏரண்ட முனிவர் திருவலஞ்சுழியிற் பிலத்துட் புகுந்து காவிரியுடன் வெளிக்கிளம்பினர். ஆதலால் திருநா வுக்கரசு சுவாமிகள் திருவலஞ்சுழியையும் இத்தலத்தையும்

ஒன்று சேர்த்து ஒரு பதிகத்தால் பாடி யிருக்கின்றனர். இது வும் ஸ்ரீகும்பேசுவரர் ஸப்தஸ்தானங்களுள் ஒன்றாகும்.

சுவாமி பெயர் சுந்தரகோடிசுவரர் தேவி பெயர் பந் தாடியம்மை.

## சமீவனம் (திருப்புறம்பியம்)

இத்தலம் கும்பகோணத்திற்கு வடமேற்கில் 4-மைல் தூரத்தில் உள்ளது. மேருமலைச்சிகரத்தில் பிரமதேவர் வைத் திருந்த அமிர்தகடம் பிரளகால வெள்ளத்தில் மிதந்து கொண்டு தெற்கு நோக்கி வந்தபோது, அந்த அமிர்தகடத் தின் மீதிருந்த தர்ப்பையும் மாவிலைகளும் இவ்விடத்தில் தங் கின. அந்தத்தர்ப்பை விழுந்த இடத்தே ஒரு தருப்பைக் காடும், ஒரு சிவலிங்கமும் தோன்றின. அதனால், இத்தலத் திற்குச் சமீவனம் என்றும் லிங்கவடிவமான சிவபெருமா னுக்கு சமீவனேசுவரர் என்றும் பெயர்கள் வழங்கலாயின. மாவிலைகள் விழுந்த இடத்தே ஒரு வன்னிமரமும் தோன்றி யது. அந்த ஸமீவனேசுவரரை ஸப்த கன்னியர்கள் பூஜித்து வருகின்றனர். இத்தலம் திருப்புறம்பியம் என்ற பெயரால் தமிழில் வழக்கப்பெறும். இது, திருஞான சம்பந்தர், திரு நாவுக்கரசர், சுந்திரர் ஆகிய மூவர் தேவாரப்பதிகங்கள் பெற்ற ஸ்தலமாகும். இத்தலத்தில் உள்ள வன்னிமரமும், அதனருகே அமைந்துள்ள கிணறும் ஒரு வைசியப் பெண் ணின் கற்பின் உண்மையை விளக்க, மதுரைமா நகரில் சாக்ஷிகளாகத் தோன்றின என்று ஹாலாஸ்ய புராணம் என்

னும் திருவிளையாடற் புராணத்தில் ஒரு சரிதம் வழங்கி வருகின்றது. இங்குள்ள விநாயகருக்குப் பிரளயங்காத்த விநாயகர் என்று பெயர். ஆவணிமீ விநாயக சதுர்த்தியில் இவ்விநாயகப் பெருமானுக்குச் செய்யும் தேன் அபிஷேகம் பிரஸித்திபெற்றதாகும். சுவாமி பெயர் சமீவனேசுவர், சாக்ஷிநாதர், தேவி பெயர் சௌந்தர்யநாயகி, பெரிய நாயகி யென்பனவாம்.

---

## பாடலவனம் (கருப்பூர்.)

இது கும்பகோணத்திற்கு ஈசான திக்கில் உள்ள ஸ்தலமாகும். இத்தலத்தில் வாலகில்யர்கள் என்னும் மகருஷிகள் இங்குள்ள சுந்தரேசுவரர் என்னும் ஈசனைத் துதித்து சாயுஜ்ய பதவி யடைந்தனர். குபேரனும் சுவர்ண ரோமன் என்னும் அரசனும் இங்குத் தவஞ்செய்து அருள்பெற்றனர்.

இங்குள்ள புண்ணிய தீர்த்தம் பிர்ம தீர்த்தம் எனப்படும். இந்த க்ஷேத்திரத்தின் தென்புறமாக இருந்த புன்னைவனக் காட்டில் காலவர் என்னும் மகரிஷிக்கு ஸ்ரீ மகாவிஷ்ணு ஸ்ரீபூமி நீளாஸமேதராய்க் காட்சியளித்தருளினார். அந்த விஷ்ணு மூர்த்தியைத் தெரிசிப்பவர்கள் பஞ்சக்குரோச யாத்திரையின் பலனை அடைவர். சுவாமி பெயர் சுந்தரேசுவரர். தேவி பெயர் அபிராமி.

---

# அத்தியாயம். 9.

## மஹாமக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து நற்கதிபெற்றவர்களின் சரித்திரங்கள்.

### (1) கிருதவீரியன் சரித்திரம்.

---

பாரத கண்டமெனும் நம் இந்துதேசத்தின் வட பாகத்தில் ஹேஹயம் என்றொரு நாடுண்டு. அந்நாட்டை முற்காலத்தில் கிருதவீரியன் என்றொரு வேந்தன் ஆண்டுவந்தான். அம்மன்னவன் கல்வி செல்வம் முதலியவற்றால் உயர்ந்தவன்; கண்டோர் மகிழும் வடிவழகு வாய்ந்தவன்; வீரமே தனது வாழ்க்கையாகக் கொண்டவன்; இரப்பவர்களுக்கு இல்லையென்னாது ஈயும் மஹோபகாரி; ஈசன் திருவடி மறவாத மனத்தினன். அவனது ஆட்சியின்கீழ்க் குடிகள் அனைவரும் பஞ்சம், பிணி, களவு முதலிய துன்பங்களின்றி, இன்புற்று வாழ்வாராயினர்.

அம்மன்னவனுடைய பட்டத்துத் தேவியாக விளங்கினவள் சோபனாங்கி என்னும் பெயரினையுடைய பெண்மணியாவள். அம்மாதோ, செந்தாமரையில் வாழும் திருமகளேயென்னத் திருவுருவும், புவிமங்கையே யென்னும் பொறுமையும், கலைமடந்தைபோலும் நல்லறிவும் அமையப்பெற்றவள்.

> " தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்;"

என்ற உத்தமஸ்திரீ தர்மத்தை மேற்கொண்டு பெண்ணிற் கணிகலமாய் விளங்கினள்.

ஆவணக்காப்பக

இத்தகைய உயர்நலன்களும் நற்குணங்களும் அமையப் பெற்ற அந்த ராஜ தம்பதிகளுக்குப் புத்திர பாக்யம் என்னும் செல்வமட்டும் உண்டாகவில்லை. அதனால் அவர்கள் மனம் வருந்துவாராயினர்.

இவ்வாருக, அந்தமேவந்தனுடைய அரண்மனையை அடுத்த வீதியில் இருந்த ஒரு குடிசையில் தினம் கூலிவேலை செய்து பிழைத்துவந்த ஓர்எளியமனிதன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரு மைந்தன் இருந்தனன். அப்புதல்வனே, சப்பைமூக்கும், விரிந்து தொங்கிய உதடும், முன்னே நீண்டு கோணலாய் அமைந்த பற்களும், குழிந்து ஆழ்ந்த குறுங் கண்களும், கோணல் வண்டையும், செம்படைமயிரும், கறுத்துப் பருத்து விளங்கிய வயிறும், சப்டைக்கால்களும் உள்ளவன். பொதுவாக அச்சிறுவன் பரமவிகாரமான உருவத்தோடு காணப்பட்டான். இவ்வளவு அவலக்ஷணங்களோடு விளங்கினுலும் அவனது பெற்ருேர் "காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு," என்றபடி, அந்தத் தம்மைந்தனை அன்புடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்துவந்தனர்.

ஒருநாள் அந்தச்சிறுவன் தன் பெற்ருேர்க்குத் தெரியாமல் எங்கேயோ விளையாடச் சென்றுவிட்டான். அக்குடியானவனும், அவனது மனைவியும் தம் மைந்தனைக் காணுது பட்ட வருத்தத்திற்கு அளவேயில்லை. வீதியில் நாலாப் பக்கமும் தேடித்திரிந்தனன். " ஆ! செல்வமகனே! குழந்தாய், என்கண்மணியே, எங்கே சென்ருய்? இனியுன்னைக் காணுது எவ்வாறு உலகில் வாழ்வோம்." என்று வாய் விட்டுக்கதறினர். பின் சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு சங்

தில், ஒரு குப்பைமேட்டில் விளையாடிக் கொண்டிருந்த அச் சிறுவனைக் கண்டுகொண்டனர். அத்தாய் தந்தையர் விரைந்து ஓடி அம்மைந்தனை தழுவியெடுத்து தம்மார்போடு அணைத்துக்கொண்டு தம் வீடுசென்று மகிழ்ந்தனர்.

இக்காட்சியை யெல்லாம் அந்த ஹேஹயமன்னன் கிருதவர்மனும், அவனது தேவி சோபனாங்கியும், தமது அரண்மனை மேன் மாடத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தனர். அதைக்கண்டதும் அவர்களுக்குப் புத்திரபாக்கியம் இல்லாமையென்ற துன்பம் புண்ணிற் கோலிட்டது போல வளரவே, தங்கள் வாழ்க்கையை நினைந்து மனம் வருந்தினர்: உலக வாழ்க்கையே அவர்களுக்கு இருண்மயமாய்த் தோன்றியது.

இவ்வாறு மக்கட்பேறு இல்லாத குறையால் வருந்தி அவ்வரசனும், அவனுடைய தேவியும் வாழ்ந்து வருங்கால் ஒருசமயம் சாகல்ய மகரிஷி என்னும் பிரசித்திபெற்ற ஒரு முனிபுங்கவர் அவ்வேந்தனைக்காண வந்தனர். அந்தத் தவசிரேஷ்டர் தாம் ஸரஸ்வதி நதி தீரத்தில் செய்யக்கருதிய ஒரு மகாயாகத்தின் பொருட்டுத் திரவியம் வேண்டுமெனக் கேட்டனர். அந்தக் கிருதவர்ம மன்னனும் முனிவரை உபசரித்து, அவர் விருப்பப்படி வேண்டும் பொருள்களை அளித்தனன். அப்போது அவ்வேந்தனும் அவனது மனைவியும் தமக்கும் பிள்ளையில்லாத குறையையும் அப்பெரியாரிடங் கூறி அருள்புரியவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். அம்மகருஷி திரிகாலங்களும் நன்குணர்ந்தவராதலின் அவ்வேந்தனை நோக்கி, "ஏ! மன்னவ! நீ முன்சென்மத்தில் ஒரு வியாபாரி. நீ உன்னிடமிருந்த சரக்குகளையெல்லாம் பொய்யாகப்

பலமடங்கு அதிக விலைகூறி விற்றுப் பொது ஜனங்களின் பொருளை அபகரித்தாய். அக்கிரமமாக வட்டி வாசியும் வாங் கினாய். உன்கடையில் இருந்த வாழைப்பழத்தைத்தின்ற ஒரு பூனையையும் கொன்றாய். ஆயினும் பிற்காலத்தில் ஏதோ நல்லறிவு தூண்டப்பெற்று நீ ஸ்ரீசைலம் என்னும் மல்லி கார்ச்சுன க்ஷேத்திரத்தில், கோயிலில் ஒரு மண்டபம் அமைத் தனை. அந்தப் புண்ணிய விசேஷத்தால் நீங்கள் இப்பிறவி யில் இந்த ராஜ்ய ஸம்பத்தைப் பெற்றிருக்கிறீர்கள் ஆனால் மேற்கூறிய மகாபாபங்களினின்றும் உங்களை விடுவித்துக் கொள்ள ஓர் உபாயம் கூறுகின்றேன். அதாவது இன்னும் ஆறுமாதங்களுக்கெல்லாம் காவேரி தீரத்திலுள்ள கும்ப கோணம் என்னும் புண்ணியக்ஷேத்திரத்தில் மஹாமகம் என் றொரு விசேஷ புண்யகால உத்ஸவம் வரப்போகின்றது. அந்த மஹாமக புண்ணிய காலத்தில் நீ உன் மனைவியுடன் அங்குச் சென்று விதிப்படி மகாமக தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்களில் நீராடி, நவரத்னத்தாற் செய்த பூனைதானம் நெய்தானம், மாதுளம் முத்துக்களைத் தங்கத்தட்டில் வைத் துப் பட்டு வஸ்திரத்தால் மூடிச்செய்யும் தானம், இவற்றைச் செய்து, ஸ்ரீமங்களாம்பிகா ஸமேத ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் முதலிய பல சிவக்ஷேத்திரங்களிலுள்ள மூர்த்திகளையும், ஸ்ரீ ஆராவமுதன் என்னும் சாரங்கபாணிப்பெருமாள் முதலிய விஷ்ணுமூர்த்திகளையும் தெரிசித்து வருவீர்களேல், உங்கள் பாபங்கள் நீங்குவதோடு புத்திர பாக்கியத்தையும் பெறு வீர்;" என்றனர்.

அதைக்கேட்ட அவ்வரசனும் அம்முனிவருடைய யாகத்தைத் தானே கூட இருந்து சிறப்பாக நடத்திவைத்துப் பின் அம்முனிவரையும் அழைத்துக்கொண்டு தன் தேவியுடன் ஸ்ரீ கும்பகோணக்ஷேத்திரம் அடைந்தனன். மகரிஷி கூறிய வண்ணம். புண்ணிய காலத்தில் விதிப்படி கன்யா தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து, தானங்கள் வழங்கி, ஸ்வாமி தெரிசனங்கள் செய்து வந்தனன். அந்த விசேஷ புண்ணியத்தால் அவனது தேவி சோபனாங்கியும் கருவுற்று ஒரு மைந்தனைப் பெற்றனள். அவ்வேந்தனது மற்ற தேவியர்களும் புத்திர பாக்கியமடைந்தனர். பட்டத்துத் தேவியான சோபனாங்கி மைந்தனே, பராக்கிரமத்திற் சிறந்து விளங்கிய கார்த்தவீரியார்ச்சுனன் என்னும் வேந்தனாவன். இந்தமஹாமக தீர்த்த ஸ்நான விசேஷத்தால் கிருதவீரியன் இகபர சுகிர்தங்களையடைந்து பின் ஸத்கதியடைந்தனன்.

---

## 2. சுதன்மர் என்னும் வேதியர் சரித்திரம்.

---

தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய பாண்டி மண்டலத்தில் தாம்ரபர்ணி தீரத்திலுள்ள ஒரு அக்ரஹாரத்தில் கௌண்டின்ய கோத்திரத்தில் சுதன்மர் என்றோர் அந்தணர் இருந்தனர். அவர் வேத சாஸ்திரங்களிலும் மற்றுமுள்ள கலைகளிலும் வல்லவராக விளங்கினவர்; பெரிய பூஸ்திதியும் கன்று காலிகள் முதலிய மற்றும்பல செல்வங்களும் பெற்றிருந்தார். அவர் நல்ல ஆசாரசீலராகவும், சிவ பூஜை அதிதிகளை உபசரித்தல் முதலிய நியமநெறிகளிற் சிறிதும்

தவறாமல் இயற்றியும் வந்தார். மேலும் அவர் அநேக யாகங்கள் செய்து பெரும்புகழ் பெற்றவர்

இவ்வாறு அந்தப் பிராமணோத்தமர் வித்தை, தனம், ஆசாரம், ஆகிய பல நலன்களை அடையப் பெற்றிருந்தும், அவருக்கு இல்லற வாழ்க்கையில் இன்பம் என்பதே இல்லாமற் போயிற்று. ஏன்? அவர் நான்கு முறை மணம் செய்து கொண்டும் அம்மனைவியர் ஒவ்வொருவரும் பிணிவாய்ப்பட்டு இறந்துபோயினர்.

மனைவியின்றி இல்லற தர்மம் நடைபெறாது என்பதை நன்கு உணர்ந்தவராதலின், அவ்வேதியர் ஐந்தாம் முறை ஒரு பெண்ணை நாடி மணம் புரிந்துகொண்டு வாழ்ந்துவருங்கால் "தலைவலி போகத் திருகுவலி வந்தவாறே போல" பூர்வ ஜன்ம பாவவினையின் பயனால் அவருக்கு அந்த மனைவியினிடமாகப் பிறந்த குழந்தைகள் எல்லாம் இளம்பருவத்திலேயே இறந்து போயின. உலகில் புத்திரபாக்கியத்தை இழந்தவர், பொன், நிலம், புகழ் முதலிய செல்வத்தைப் பெற்றிருந்தாலும், அவற்றால் யாது பயன்? அம்மறையவர் என் செய்வார் பாவம்!

இவ்விதம் அவர் தம் மனைவிகளையும் புதல்வர்களையும் பறிகொடுத்தது தம் பூர்வஜன்மத் தீவினையால் என்பதை அறிந்து, ஏழைகளுக்கு அன்னமிட்டனர். சத்திரங்களையும், சாவடிகளையும் கட்டிவைத்தார். பல குளங்களையும் கிணறுகளையும் உண்டாக்கினர். மற்றும் பல தானதர்மங்களை இயற்றினர். பின்பு அம்மறையோர் தமது செல்வம

னத்தையும் ஒருவரிடம் ஒப்புவித்துவிட்டுத் தம்மனைவியுடன் புண்ணியக்ஷேத்திர யாத்திரை செய்யப்புறப்பட்டனர்.

அந்தச் சுதன்மர் என்னும் பிராமணர் பற்பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடியும் க்ஷேத்திர வாஸங்கள் செய்தும், மூர்த்திகளைத் தெரிசித்துக்கொண்டும் வருகையில் அகஸ்திய முனிவரின் சிஷ்யரான குசிகர் என்னும் ஒரு முனிபுங்கவருடைய ஆச்ரமத்தை யடைந்தனர். அவர் அம்முனிவரிடம் தமது குறைகளைத் தெரிவித்துக்கொண்டனர். அம்முனிவர் திரிகாலங்களையும் உணர்ந்த பெரியோராதலின், அவ்வேதியருடைய பூர்வ ஜன்ம விருத்தாந்தங்களைத் தமது ஞானக்கண்ணால் ஆராய்ந்து பின் வருமாறு மொழியலாயினர்.

“நீர் முன் ஜன்மத்தில் வேதபுரி என்னும் கிராமத்தில் ஓர் எளிய அந்தணர் குலத்தில் பிறந்து வாழ்ந்து வந்தீர். அப்போது நீர் பலரிடத்தும் யாசகம் செய்து பொருள்சேர்த்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோயிலைக் கட்டினீர். அந்தப் புண்ணிய விசேஷத்தால் இப்பிறவியில் இந்தப்பிராமண ஜன்மத்தோடு விசேஷ செல்வத்தையும் அடைந்தீர். ஆனால் அதற்குமுந்திய ஜன்மத்தில் உமக்குப் பத்துப் புதல்வியர் இருந்தனர். அவர்களில் ஒன்பது பேர்களை நீர் கிழவர்களுக்கு மணம் செய்வித்து அதற்காக அவர்களிடமிருந்து பொருள் வாங்கிக்கொண்டீர். கிழவர்களுக்கு வாழ்க்கைப்படுத்திய வருத்தத்தால் அப்பெண்கள் உம்மை நிந்தித்தனர். சிலர் அந்தத் துன்பம் பொறுக்காமல் நதியில் விழுந்து இறந்தனர். சிலர் விஷம் உண்டு பாய்ந்தனர். சிலர்

இளமையிலேயே தம் பெற்றோர்களை இழந்து வைதவ்யனிலை மையை அடைந்து வருந்தினர். மேலும் நீர் உமது பத்தா வது பெண்ணுக்கு, அவளுடைய கணவன்போட்ட நகைகளை எடுத்துக்கொண்டு அப்பெண்ணை ஒருவித சீதனமும் இன்றி அவளுடைய புருஷன் வீட்டிற்கு அனுப்பினீர். அம்மட்டோ! நீர் திருமால் கோயில் நந்தவனத்தில் இருந்த பழங்களைத் திருடித் தின்றீர். இந்தப்பாவங்கள் யாவும் உம்மைத் தொடர்ந்து வந்ததையால் இப்பொழுது இப்படி மனைவிமக்களை இழந்து வருந்துகின்றீர். ஆனால் இந்த உமது பாவங்கள் தீர உமக்கு ஒரு வழியிருக்கிறது. அதாவது:— இப்பொழுது வரும் மாசி மாதத்தில் சோழமண்டலத்திலே காவேரி தீரத்திலே உள்ள கும்பகோண க்ஷேத்திரத்தில் மஹாமகம் என்னும் ஒருவிசேஷ புண்ணியத் திருநாள் நடைபெறப் போகின்றது. அக்காலத்தில் நீர் உமது மனைவியுடன் அங்குச்சென்று அமிர்தவாஸி, கன்யாதீர்த்தம் என்னும் பெயர்களுடன் விளங்கும் மஹாமக தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம் செய்து, தேவ ஆராதனை, தான தருமங்கள் புரிந்தால் உமது பூர்வ ஜன்மபாவங்கள் உம்மைவிட்டு நீங்கும். புத்திரபாக்யத்தையும் பெறுவீர். உமது இல்வாழ்க்கையும் இனிதாக விளங்கும்;” என்றனர்.

அம்முனிவர் கூறிய பிரகாரமே, அந்தச் சுதன்மர் என்னும் அவ்வேதியர் தமது மனைவியுடன் கும்பகோண க்ஷேத்திரத்தையடைந்து மஹாமக தீர்த்த ஸ்நானம் செய்து, தேவ பூஜை, பிராமண போஜனம் முதலியவைகளையும், மற்றும் பல தான தருமங்களையும் நடத்திச் சிலநாள் அந்த க்ஷேத்திரவாஸ

றும், பஞ்சக்குரோச யாத்திரையும் செய்து பின் தமது ஜன்மதேசம் சென்றனர். அதனால் அவர் தம் பாவங்களினின்று நீங்கினவராகிப் புத்திரப்பேறு பெற்றதோடு, தம் மனைவியுடன் பலநாள் இல்லற தர்மத்தை இனிதாக நடத்திவந்து முடிவில் ஸாயுஜ்ய பதவியையும் அடைந்தனர்.

---

## 3. வீரசர்மா சரிதம்.

---

கலிங்க நாட்டில் முன், வீரசர்மா என்றொரு மன்னன் இருந்தனன். அவனுடைய மனைவியின் பெயர் ஸுமதி யென்பதாம். அவள் கற்பிற்சிறந்த உத்தமி; உத்தம லக்ஷணம் வாய்ந்தவள்; அம்மனைவியுடன் அந்த வேந்தன் மனம் ஒருமித்து வாழ்ந்துவருங்கால் அவர்களுக்குப் பண்டை வினையால் ஓர் அவலக்ஷணமான பிள்ளை யொன்று பிறந்தது. அதன் விகார உருவத்தை என்னென்றுரைப்பது! அக்குழந்தை வழுக்கைத் தலையும், திக்கிப்பற்களும், செம்பட்டை மயிரும், கோணலாயுள்ள கால்களும் பெற்று, கண்டோர் அருவருக்கத்தக்க உருவத்துடனிருந்தது. மேலும் அது ஆணும் பெண்ணுமற்ற ஓர் அலியாகவும் இருந்ததனால், அப்பிள்ளையைப்பெற்ற அந்த ராஜ தம்பதிகளின் மனம் எவ்வாறிருக்கும்? அவர்கள் என்னபாவம் செய்து இப்பிள்ளையைப்பெற்றோம் என்று சோகத்துயரத்தில் மூழ்கி வருந்துவாராயினர்.

இவ்வாறாக ஒருசமயம் அவ்வேந்தன் சாண்டிலயர் என்னும் முனிவரிடம் சென்று தன் குறைகளைக் கூறி வருந்தவே அம்முனிவர் அவனைநோக்கி, "மன்னவ! நீ முன் பிறப்பிலும் ஓர் அரசனாகவே இருந்தாய். அப்போது உனது செல்வச் செருக்கால், ஆராயாது நாகப்பிரதிஷ்டை செய்திருந்த ஒரு கல்லைப்பிளந்து போட்டு உன் அரண்மனை வாயிற் படிக் கட்டைக் கட்டினாய். அந்த மஹா பாவத்தால் இந்த ஜன்மத்தில் இப்படி ஒரு கோர ரூபமுள்ள புதல்வனை அடைந்தாய் நீ தெற்கே சோழமண்டலத்தில் காவேரி தீரத்தில் உள்ள கும்பகோண க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்குள்ள மஹாமக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து எள்ளு, ரத்னம் முதலிய தானங்களுடன், ஒரு ரத்னம் இழைக்கப்பெற்ற நாகத்தையும் தானம் செய்தால் உனது பாவம் தீரும்," என்று கூறினார். அவ்வேந்தனும் அம்முனிவர் ஆக்ஞைப்படி மஹாமக மென்னும் விசேஷ புண்ணிய காலத்திற் கும்பகோணம் வந்து மஹாமக ஸ்நானம் செய்து தான தர்மங்களியற்றி, நாகப்பிரதிஷ்டையும், பொன்னாலும் ரத்னத்தினாலும் செய்த நாகதானத்தையும் செய்து தன் பாவங்களைப் போக்கிக்கொண்டான். அதனால் அம்மன்னவன் ஓர் அழகிய புதல்வனை அடைந்து இன்புற்றான். பின் அம்மன்னவன் தனது அந்த மைந்தனுக்குத் தக்கவயது வந்ததும், முடிசூட்டித் தனது அரசுரிமைகளை அவனிடம் ஒப்புவித்துவிட்டுத் தன்மனைவியுடன் மீண்டும் கும்பகோணம வந்து அந்த க்ஷேத்திரத்திலேயே வாஸம் செய்துகொண்டு ஸ்ரீ ஆதிகும்பேசுவர் ஆலயத்திற்கும், மஹாமகத் தீர்த்தத் திருக்குளத்திற்கும் பல திருப்பணிகள் புரிந்து

அந்த க்ஷேத்திரத்திலேயே தன் காலம் முழுவதையும் கழித்து, முடிவில் சிவ ஸாயுஜ்யம் என்னும் நற்பதவியையும் அடைந்தனன்.

## 4. ஞானவான் என்னும் பிராமணனுடைய பித்ருஹத்தி தோஷம் நீங்கியது.

பல வருஷங்களுக்கு முன், கொங்கண தேசத்தில் யக்ஞசிலர் என்றொரு வேதியர் இருந்தனர். அவருக்கு ஸம்பூர்ண லக்ஷ்மி என்றொரு கற்பிற் சிறந்த மனைவியிருந்தனள். அவர்களுக்கு ஞானவான் என்றொரு புதல்வன் இருந்தனன். ஒரு நாள் அந்த யக்ஞசிலர் தாம் நற்கதியடையவும். உலகம் தழைத்தோங்கவும் கருதி கூர்மபாகம் என்றொரு வேள்வி செய்ய எண்ணங்கொண்டார். அவ்வேள்விக்கு வேண்டிய பொருள்கள் யாவும் வருவிக்கப்பட்டன. அவர் தம் புதல்வனை ஞானவானை அழைத்து, "புத்ர! நீ சமுத்திர தீரத்தை யடைந்து ஸமுத்ர ராஜனை நோக்கி 'யத்கூர்ம' என்ற மந்திரத்தால் பிரார்த்தித்துக்கேள். அவர் யான் இப்பொழுது நடத்தப்போகும் யாகத்திற்கு வேண்டிய ஒரு ஆமையை அளிப்பார். அதைப்பெற்றுக்கொண்டு விரைவில் இந்த யாகசாலைக்கு வந்துவிடு. காலதாமதஞ் செய்யாதே;" என்று சொல்லியனுப்பினர். ஞானவானும் அவ்வாறே செய்வதாகக் கூறி விடைபெற்றுக்கொண்டு கடற்கரையை யடைந்தனன்.

அப்போது மாயை அந்த ஞானவானுடைய மனவுறுதியைப் பரிசோதிக்கக்கருதி, ஸர்வலக்ஷணங்களோடு நல்ல தருணம் வாய்ந்த ஓர் இளம்பெண்மணியாக உருவங்கொண்ட

னன் அவள் நல்ல ஆடை ஆபரணங்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு கையில் வீணையேந்தி இனியகானம் செய்துகொண்டு அந்த ஞானவானைக் கண்டு புன்முறுவல் செய்வாளாயினள். அந்த யுவதியின் வடிவழகிலும், கானசக்தியிலும் ஈடுபட்ட அந்த அந்தணச் சிறுவன், தன்செயலைமறந்து அவள் மாய வலையிற் சிக்குண்டு நின்றனன். பின் அவன் தன் பெற்றோர் கட்டளையை மறந்து அப்பெண்மணியை அடைய வேண்டி அவளைத் தொடர்ந்து சென்றனன். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. பின்னர் அம்மாயையும் அவன் கண்ணிற்படாது மறைந்துவிட்டனள். பிறகு அவனுக்குத் தன் தந்தையின் ஞாபகம்வரவே, தான் வீணே மயங்கிக் காலதாமதம் செய்ததைப்பற்றி வருந்தி, பின் ஸமுத்ரராஜனை மீண்டும் பிரார்த்தித்து ஆமையைப் பெற்றுக்கொண்டு மீண்டனன். விரைவில் யாகசாலையை யடைந்தான். ஆனால் அங்கு பல நாட்களாகத் தம் மைந்தன் வாராமையால் யாகம் பூர்த்தியாகாது போகவே, யாகதீக்ஷையில் உபவாஸத்துடன் இருந்த அவனது தாய் தந்தையர்களான அந்த யக்ஞரிலரும் அவரது மனைவி சம்பூர்ணலக்ஷ்மியும் உடல் சோர்ந்து இறந்து போய்க்கிடந்தனர் அதனால் அந்த ஞானவானுக்குப் பிதுர்ஹத்தி தோஷம் ஏற்பட்டது. அதனால் வருந்திய அவன், பெரியோர்களுடைய அனுமதிப்படி கும்பகோண க்ஷேத்திரத்தையடைந்து ஒரு வருஷகாலம் அங்கு வசித்து மஹாமக ஸ்நானமும் செய்தான். அதனால் அவன் அந்தக் கொடிய பிதுர்கத்தி மாதுர்ஹத்தியாகிய பாவங்களினின்றும் விடுபட்டு நற்கதி யடைந்தனன்.

## 5. ஒரு தாஸியின் சரித்திரம்.

கோதாவரி தீரத்தில் பிர்ஹ்மேசுவரம் என்னும் சிவாலயத்தில் பணிவிடை புரிந்து வந்த ஸுப்பிரபா என்னும் ஒரு தேவ தாஸிக்கு ஒரு பெண் இருந்தனள். அவள் பூர்வ ஜன்மத்தில் ஒரு பிராமண ஸ்திரீயாக இருந்தாள். அப்போது அவள் எப்பொழுதும் தன் கணவனை நிந்திப்பதும், அயல் புருஷர்களைப் புகழ்வதுமாக இருந்தனள். முடிவில் அவள் தன் கணவனையே கொன்றுவிட்டு, அன்னிய புருஷர்களை விரும்பிக் கூடி வாழ்ந்து வந்தனள். அந்த மகா பாபத்தினால் அவள் இப்பிறவியில் ஒரு தாஸியாகப் பிறந்ததோடு கண்டோர் அருவருக்கும்படியான துர்க்கந்தத்தோடு கூடிய மூத்திர இருசிரம் என்னும் கொடிய நோயாற் பீடிக்கப் பெற்று வருந்தினாள். எல்லோரும் அவளைக்காணவும் விரும்பாது நிந்தித்து அகல்வாராயினர்.

இவ்வாறு அந்தத் தாஸி மகள் பிணியால் வருந்திக் கொண்டிருக்கவே ஒரு சமயம் கும்பகோண க்ஷேத்திரத்தில் நடைபெறும் மஹாமக ஸ்நானத்தை உத்தேசித்துப் பல யாத்திரியர்கள் பிரயாணம் செல்வதைக் கண்டனள். அவள் அவர்களுடன் பின் தொடர்ந்து அத்திருக் குடந்தை நகரையடைந்து மஹாமகத்தன்று அந்தக்கன்னியா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தனள். அதனால் அவளது கொடிய வியாதியும் நீங்கியது. பண்டைப்பாவமும் விலகிற்று. அந்தத் தாஸிமகள், பின் நவ யௌவனத்தோடு நல்ல ஸௌந்தரியத்

தையும் அடைந்தனள். பின்பு அவள் தன்னூரை யடைந்து பல நாள் ஸகல சம்பத்துக்களுடன் ஸௌக்யமாய் வாழ்ந்து வந்து முடிவில் நற்கதி பெற்றனள்.

---

## அத்தியாயம் 10.

## இந்நகரின் மற்ற விசேஷங்கள்

### 1. மூர்க்க நாயனார்

---

"தெண்ணீர் வயற் றொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து" என்று ஔவைப் பெருமாட்டியாரால் புகழ்ந்து பாராட்டப்பெற்ற தொண்டை நாடு இப்பொழுது செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு, சித்தூர் முதலிய ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசமாகும். அந்த நாட்டில் திருவேற்காடு என்ற ஓர் ஊர் உள்ளது. அவ்வூரில் வேளாளர் குலத்தில் ஒரு பெரியார் இருந்தனர். அவர் சிவபெருமானிடத்தும் சிவனடியார்கள் இடத்தும் மிக்க அன்பு பூண்டவர்; அவர் நாளும் தம்மை நாடிவரும் அடியார்களுக்கு உணவு, உடை முதலியன அளித்து ஆதரித்துவந்தார். அவ்வாறு பல காலம் அடியார்க்கு வேண்டுவன அளித்து ஆதரித்து வருங்கால் நாளடைவில் அவரது செல்வம் குறைந்து விட்டது; ஏழ்மை நிலைமையை அடைந்தனர். ஆயினும் அவர் சிவனடியார்களை ஆதரிப்பதை நிறுத்தவில்லை அவர் தமக்குப் பொருள் இல்லாமையை யுணர்ந்து இந்தக் கும்பகோண

நகரை யடைந்து ஏதேனும் தொழில் செய்து பணம் ஸம்பாதிக்க எண்ணினர். இங்குவந்து வேறு ஒரு தொழிலும் அகப்படாமையால் அவர், சூதாடிப் பணம் ஸம்பாதிக்கத் தொடங்கினர். ஆட்டத்தில் அக்ரமமாக நடக்காது தாம் ஜயித்த பொருளைக்கொண்டு சிவனடியார்களை ஆதரித்து வந்தார். அவர் ஆட்டத்தில் யாராவது முறை தவறினல் அவரைத் தம் உடைவாள் கொண்டு குத்திவிடுவர். ஆதலின் அவரை யாவரும் மூர்க்கர் என்றே கூப்பிடுவாராயினர். "கோதாட்டொழி" "சூதுவிரும்பேல்" என்ற நீதிகளுக்கு மாருக அவர் சூதாட்டத்தைத் தம் தொழிலாகக் கொண்டாரெனினும் அதனுல் வரும் பொருளைச் சிவனடியார்களுக்கு உணவுமுதலியன அளிப்பதற்கே செலவிட்டு வந்தார். ஆகலின் அவர்க்கு நற்சூதர் என்ற பெயர் வழங்குவதாயிற்று. அந்த மூர்க்க நாயனர் என்னும் சிவ பக்தர் இந்தக் குடந்தை நகரிலேயே பலகாலம் சூதாடிப் பொருள்தேடிச் சிவனடியார்களை ஆதரித்துவந்து பின் ஈசன் திருவடி நிழலை யடைந்தனர். இச்சரிதம் சேக்கிழார் என்னும் பெரியார் இயற்றிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தில் உள்ளதாகும்.

## 2. கோவிந்த தீக்ஷதர்.

கோவிந்த தீக்ஷதர் என்னும் மஹான், மைசூர் நாட்டிலுள்ள கொல்லாபுரம் என்ற ஊரில், இற்றைக்கு ஏறக்குறைய 300-ஆண்டுகளுக்கு முன் ஓர் அந்தணர் குலத்திற் பிறந்தவராவர். இவர் இளமையிலேயே தம் தந்தையை இழந்தமையால், இவர் தமது தாயாருடன் ஆரணியில் இருந்த தம் தாய்மாமன் வீட்டிற்குச்சென்று, அங்கு அவரால் ஆதரிக்கப்பட்டு

வந்தனர். இவருடைய மாதுலர் ஆரணி பாளையபட்டான ஒரு நாயக்கரிடம் ஓர் உத்யோகத்தில் இருந்தனர். அங்குக் கோவிந்தர் இளமையிலே கல்விகற்று ஸம்ஸ்கிருத பாஷையில் தேர்ச்சி பெற்றவரானார்; வேதசாஸ்திரங்களிலும், ஸங்கீத கலையிலும் வல்லவராக விளங்கினர்.

கோவிந்தரது கல்வி கேள்விகளையும், நற்குண நன்னடக்கைகளையுங் கண்ட அவருடைய மாதுலர், தம் புதல்வியை அவர்க்கு மணஞ் செய்வித்தமையோடு பின் தமது உத்யோகத்தையும் அவருக்கே செய்துவைத்தனர்.

இவ்வாருக:— அக்காலம் தஞ்சை மன்னராக இருந்த நாயக்க அரசர், மேற்கூறிய ஆரணி பாளையபட்டின் குமாரியைத் திருமணம் புரிந்துகொண்டனர். அம்மன்னர் கோவிந்தரது கல்வி ஒழுக்கம் முதலிய பெருமைகளைக்கண்டு அவரைத் தமது மந்திரியாக நியமித்துத் தமது தஞ்சை நகருக்கு வருவித்துக்கொண்டனர். அதனல் அந்தக் கோவிந்தர் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களுக்கு மந்திரியாக ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கதிகம் இருந்தனர்.

இவர் மந்திரியாக இருந்த காலத்தில் செய்த தான தர்மங்களும், தேவாலயத் திருப்பணிகளும் பலவாம். இவர் கும்பகோணத்திற்கு அருகேயுள்ள, பட்டீசுவரம் என்னும் ஸ்தலத்தில் வாழ்ந்து வந்து தினம் தஞ்சைக்குச் செல்வது வழக்கம். இவர் கும்பகோணத்தில், பல யாகங்களைச் செய்தனர். காவிரிக் கரையை அடுத்துள்ள யாகசாலைத்தெரு என்னும் அக்ரகாரமும், ஐயன்தெரு என்னும் வீதியும், காமாக்ஷி ஜோஸ்யர் தெருவும் இவராலேயே கட்டப்பட்டுப் பிராமணர்களுக்குத் தானம் செய்யப்பட்டன. இப்பெரியார் இந்நகரில்

உள்ள ஸ்ரீராமஸ்வாமி கோயிலைப் புதிதாகக் கட்டியதோடு, ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் ஆலயத்தையும் மஹாமக தீர்த்தப் படித்துறைகளையும் அங்கு சுற்றியுள்ள மண்டபங்களையும் கட்டி மற்றும் பல அரிய திருப்பணிகள் புரிந்தனராம். பட்டீசுவரம் கோயிலும் இவராலேயே திருப்பணி செய்யப்பட்டது. மேலும் ராமேசுவரம், ஸ்ரீரங்கம், விஜயராகவபுரம் முதலிய இடங்களிலும் ஸ்ரீராமபிரானுக்கு ஆலயம் கட்டியிருக்கின்றனர். இவரால் ஏற்படுத்தப்பட்ட வேதபாடசாலை இன்றும் யாகசாலைத் தெருவில் நடைபெற்று வருகின்றது.

தஞ்சை நகரில் உள்ள ஐயன்குளமும், ஐயன்வாய்க்காலும், இவரால் வெட்டப்பட்டன. ஐயன்பேட்டை என்ற ஊரும் அக்காலத்தில் இவரால் சந்தை கூடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட இடமாகும். மாயூரத்திலுள்ள மஹாதானத் தெரு என்னும் வீதியும், இவரால் வீடுகள் கட்டி தானம் செய்யப்பெற்ற அக்ரஹாரமேயாகும். திருவையாறு முதல், காவிரிப்பட்டினம் வரையில் உள்ள க்ஷேத்திரங்களில் உள்ள காவிரித்துறைகளில் விளங்கும் புஷ்யமண்டபப்படித் துறைகள் யாவும் இந்த மஹானாலேயே கட்டப் பெற்றனவாம்.

இவர் நூறு யாகங்களுக்கதிகம் செய்தனர். அதனால் இவருக்குக் கோவிந்த தீக்ஷிதர், கோவிந்த மகி எனப் பெயர்கள் வழங்கலாயின. இந்தக் கோவிந்த தீக்ஷிதர் ஸம்ஸ்கிருதத்தில் பல அரிய நூல்கள் இயற்றியுள்ளார். இவர் ஸங்கீத சாஸ்திரத்திலும் மிக்க வல்லவர். இவரால் இயற்றப்பெற்ற ஸங்கீத ஸுதாநிதி என்னும் ஸங்கீத சாஸ்திரபுஸ்தகம், சிறந்த சங்கீத நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இப்பொழுதுள்ள 21-தந்திகளுடன் கூடிய வீணை இந்தக் கோவிந்த

தீக்ஷதராலேயே ஏற்படுத்தப்பட்டதாகும். அவர் காலத்திற்கு முன் வீணை 53-தந்திகளுடன் விளங்கியதாம். இவர் கும்ப கோண க்ஷேத்திரத்திற் பதினாயிரம் வில்வமரங்களை வைத்துப் பயிராக்கினர். அந்த இடமே இப்பொழுது மகாதளம் பேட்டையென்ற பெயருடன் வழங்கி வருகின்றது. இவருடைய திருவுருவச்சிலையும், இவரது மனைவியின் திருவுருவச்சிலையும் பட்டீசுவரம் கோயிலினும், கும்பகோணம் ஆதி கும்பேசுவரர் கோயிலிலும் இருக்கின்றன.

இந்த மஹானுடைய தெய்வபக்தி, தர்மசிந்தனை, ஆசார நியமம், கலாக்ஞானம் இவற்றை யென்னென்று புகழ்வது! "தோன்றிற் புகழொடு தோன்றுக;" என்ற பெருமைக்கு இவரே ஓர் ஒப்பற்ற உதாரணமன்றோ?

---

## 3. ஸ்ரீமத் சங்கராசாரியர் மடம்.

கும்பகோண க்ஷேத்திரத்தில் காவிரி பகவத்படித்துறையையடுத்து ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் மடம் ஒன்று விளங்குவது காணலாம். அந்தமடம் அங்கு அமைந்திருப்பதால் அந்தத் தெருவுக்கு மடத்துத்தெரு என பெயர் வழங்கி வருகின்றது. அந்த மடம் அங்கு ஏற்பட்ட காரணத்தையும், அம்மடத்தின் வரலாறுகளையும் ஒருவாறு தொகுத்துக் கூறுவாம்.

இன்றைக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், நமது தேசத்தில் நமது வைதீகமதமே சீர்குலைந்து போகவும், வேறுபல மதங்கள் தோன்றவுமாயின. அதனால் நமது நாட்டுமக்களிற் சிலர் தெய்வ வழிபாடு, ஆசாரநியமம் முதலிய

வைகளிற்சிரத்தையின்றிப் பாஷண்டர்களாயினர். ஆகையால் நமது மத உண்மைகளை நிலைநிறுத்தவும், மன்னுயிர்களை நல்வழியிற் செலுத்தவும் திருவுளங்கொண்டு, ஸ்ரீகைலாஸபதியான ஸ்ரீபரமேசுவரர், கேரள தேசமென்னும் மலையாள நாட்டில் காலடி என்னுங் கிராமத்தில் ஒரு வேதியர் குலத்தில் அவதரித்தனர். அவரே ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரியர் என்னும் ஸ்ரீ ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள் ஆவர்

அந்தச் சங்கரர் இளமையிலேயே, தம் தந்தையை இழந்தனர். ஆயினும் அவர் வேதசாஸ்திர முதலிய வடமொழிக் கலைகளில் வல்லவராய் விளங்கினர். அவர் இல்வாழ்க்கையை விரும்பாது அவ்விளம் பருவத்திலேயே சந்நியாசம் என்னும் துறவு மார்க்கத்தை மேற்கொண்டு, உலகில் வைதிக தர்மத்தைப் பரவச்செய்யத் தேச மெங்கும் யாத்திரை செய்வாராயினர். அப்பெரியார் ஆங்காங்கு எதிர்ப்பட்ட புறமதஸ்தர்களை வாதில் வென்று தமது அத்வைதக் கொள்கையை எங்கும் நிலை நாட்டிவைத்தனர்.

பின்பு அவர், மைசூர் ராஜ்யத்தில் ஸ்ருங்கேரி யென்னுமிடத்தில் **ஸ்ரீசாரதா பீடம்** என்னும் ஒரு மடத்தை ஸ்தாபித்து அதில் தமது சிஷ்யர் ஒருவரைத் தலைவராக இருக்கச் செய்தனர். அவ்வாறே பின்னும் அப்பெரியார் **துவாரகை, ஜகந்நாதம், பதரிகாச்ரமம், ஸ்ரீநகர்** முதலிய இடங்களிலும் தமது, மடங்களை ஏற்படுத்தி அவ்விடங்களிலும் தமது சிஷ்யர்களையே தலைவர்களாக நியமித்தனர். அதன் பின்னர் அவர் ஸ்ரீகாஞ்சிபுரத்தையடைந்து, அங்கு **ஸ்ரீகாமகோடி பீடம்** என்னும் ஒருமடத்தை ஸ்தாபித்து அதில் தாமே தலைவ

ராக வீற்றிருந்தனர். அன்று முதல் அந்த காமகோடி பீடம் என்னும் மடம் அந்நகரிலேயே நிலைபெற்று வந்தது. பல மன்னர்களும் பிரபுக்களும் அந்த மடத்திற்குப்பல மானியங்களும் மற்றும் பல உதவிகளும் அளித்து ஆதரித்து வந்தனர்

சுமார் 150-வருஷங்களுக்கு முன், தென்னாட்டில் மகம்மதியர்கள் பிரவேசித்து, இந்துக்களுடைய கோயில்களையும் உரிமைகளையும் பாழ்படுத்தத் தொடங்கினர். அவர்கள் ஸ்ரீகாஞ்சீபுரத்தையும் அணுகி ஸ்ரீகாமகோடிபீடம் என்னும் மடத்தையும் பிடித்துக்கொள்வர் என்ற பயம் ஏற்பட்டது. அதனை அறிந்த அப்போது இருந்த சுவாமிகள் தமது பூஜை முதலியவற்றிற்கு இனி யிடையூறு உண்டாமென அஞ்சித் தமது பரிவாரங்களுடன், அந்நகரை விட்டுப் புறப்பட்டுத் தெற்கு நோக்கி வந்தனர். சுவாமிகளுடைய வரவை அறிந்த உடையார்பாளையம் ஜெமீன்தார், அவர்கள், விருப்போடு எதிர்கொண்டு தமது ஊருக்கு அழைத்துவந்து அங்குச் சில நாள் உபசரித்தனர். ஆனால் அவ்வூர் தீர்த்தவசதி யில்லாமையை அறிந்த சுவாமிகள், அவ்விடத்தில் அதிக நாட்கள் வசிக்க விரும்பவில்லை. அக்காலம் தஞ்சை ஸமஸ்தானத்தை ஆண்டு வந்த பிரதப ஸிம்ஹன் என்னும் மஹாராஷ்டிர மன்னர், சுவாமிகளின் வரவை அறிந்து அவர்களைத் தஞ்சை மா நகருக்கு எழுந்தருளச் செய்து, அங்கு அவருக்கு ஒரு மடத்தையும் அமைத்துக்கொடுத்து, மற்றும் பல ஆதரவுகளும் அளித்தனர். அக்காலத்தே தான் தஞ்சை மேலவீதியிலுள்ள ஸ்ரீகாமாக்ஷி அம்மன் கோயிலும் கட்டப்பட்டு, அதில் ஸ்ரீபங்காரு காமாக்ஷி யென்னும் தேவியையும் பிரதிஷ்டை செய்யப்பட்ட தென்பர். அவ்வாறு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடமடம் அத்தஞ்சை நகரில் 80-ஆண்டுகளுக்கதிகம் நிலைபெற்று ஓங்குவதாயிற்று.

பின்பு தஞ்சை மன்னராக விளங்கிய ஸரபோஜி மஹாராஜா காலத்தில், அதாவது இன்றைக்கு நூறுஆண்டுகளுக்கு முன் அம்மடத்தில் விளங்கிய சங்கராசாரிய சுவாமிகள் திருவுளப்படி, ஸ்ரீ கும்பகோணக்ஷேத்திரதில், ஸ்ரீகாவேரித்துறையையடுத்து, டபீர்ப்பண்டிதர் என்னும் மந்திரியவர்களின் முயற்சியால், இப்பொழுதுள்ள மடம் கட்டப்பெற்று, ஷெ சுவாமிகள் தஞ்சை நகரைவிட்டு, இந்நகரில் உள்ள மடத்திற்கு எழுந்தருள்வாராயினர். அன்றுதொட்டு, ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதாசாரிய ஸ்வாமிகள் தலைவராக வீற்றிருந்த ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் என்னும் மடத்தின் தலைமை ஸ்தானம் இந்தக் கும்பகோணக்ஷேத்திரத்திலேயே அன்னோர் சிஷ்ய பரம்பரையில் நிலைபெற்று விளங்கிவருகின்றது இப்பொழுது இந்தக் காமகோடி பீடாதிபதிகளாய் விளங்கும் ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள், ஸ்ரீ சந்திரசேகரேந்திர **ஸரஸ்வதி ஸ்வாமிகள்** என்னும் பெரியோர் ஆவர்.

---

## 4. ஸ்ரீவிஜயேந்திராசாரிய ஸ்வாமிகள்.

---

இந்தக் கும்பகோண க்ஷேத்திரத்தில் மத்வமதத் தலைவர்களுள் ஒருவராகிய, ஸ்ரீ விஜயேந்திராசாரிய ஸ்வாமிகள் என்னும் பெரியார் பலகாலம் வஸித்து வந்து, இத்திரு நகரிலேயே ஸித்தியடைந்தனர். அந்த மஹானுடைய ஸமாதி காவிரிக் கரையில் உள்ள ஒரு சோலையில் விளங்கி வருகின்றது. அப்பெரியாருடைய ஸமாதி தெரிசனத்திற்கும், அங்கு அவரது திருநக்ஷத்திரம் முதலிய விசேஷகாலங்களில் நடைபெறும் ஆராதனை முதலிய உத்ஸவங்களுக்கும் மத்வமதஸ்தர்கள் பலர் வருவதுண்டு. ஸ்ரீ ஆதிகும்பேசுவர் ஆலயத்தின் தெற்கு

வீதியையடுத்துள்ள ஆசாரியர் தெரு என்னும் வீதியும் இந்த விஜயேந்திராசாரியர் என்னும் மத்வமதத்தலைவர் வஸித்து வந்த காரணம்பற்றி அவரது பெயராலேயே, இன்றும் விளங்கி வருகின்றது.

மேலும், இந்நகரில் சைவம், வைஷ்ணவம், அத்வைதம், துவைதம், வீரசைவம் ஆகிய பற்பல மதத்தினர்களுக்கு உரிய பல தேவாலயங்களும், மடங்களும் சிறந்து விளங்குகின்றன. அவற்றோடு, இங்குப் பல மதத் தலைவர்களும் ஆசாரியர்களும், வேதசாஸ்திர இதிஹாஸ புராணங்களிலும், மற்றும் பல கலைகளிலும் நிபுணர்களான வித்வத் சிரோமணிகளிற் பலரும் சிறந்து விளங்கிவருவாராயினர். இதனாலன்றோ, இன்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் இத்திருக்குடந்தைத் திருநகரில் தோன்றி நம் தமிழ்நாடெங்கும் ஆசுகவி மாரி வீசிவந்த காளமேகம் என்னுங்கவிராஜப்பெருமான், இத்தலத்தை,

"திருக்குடந் தையாதி கும்பேசர் செந்தா
மரைக்குளங் கங்கை மகங்கா—விரிக்கரையின்
ஓரங்கிழ்க் கோட்டங்கா ரோணமங்கை நாயகியார்
சாரங்க பாணி தலம்;"

என்னும் வெண்பாவாற் சிறப்பிப் பாராயினர்.

மேற்கூறியவற்றால் இந்தக் கும்பகோண க்ஷேத்திரம், தீர்த்தம், க்ஷேத்திரம், மூர்த்தி ஆகிய மூன்று விசேஷங்களால் நம்பரத கண்டத்திலுள்ள எல்லா க்ஷேத்திரங்களிலும் சிறப்புற்று விளங்குவதென்பது இனிது விளங்குவதாகும்.

## (வாழி வெண்பா.)

வாழி தமிழ்நாடு வாழி வளர்நங்கள்
வாழி திருக்குடந்தை மாநகரும்—வாழியரோ
மங்களமின் கும்பேசர் மாமக தீர்த்தமொடு
பொங்கு காவிரிப் புனல்.

[stamp]

# மங்களாம்பிகை நகர்.

திருக்குடந்தைமாநகர் என்னும்
கும்பகோண க்ஷேத்திரத்தில்
1933-௵ மார்ச்சு௴ 10௳ நடைபெறும்

## மகாமஹ உற்சவத்திற்கு

வரும் யாத்ரியர்களுக்கு வசதிகள்.

தாங்கள் தங்குவதற்கும், போஜனத்துக்கும் கவலை இல்லை. மிகுந்த சுகாதாரம் பொருந்திய ஸ்தலம். சகல சௌகரியங்களும் அளிக்கப்படும். குறைந்த சார்ஜில் மிகுந்த வஸதிகள். இடமுள்ளவரையில்தான் டிக்கட்டுகள் வெளியிடப்படும். 1933-௵ ஜனவரி௴ 30௳ க்கு மேல் டிக்கட்டுகள் கிடைக்காது. முந்துங்கள், இன்றே தங்கள் பெயர்களை அட்வான்சுடன் பதிவுசெய்து கொள்ளுங்கள். மற்ற விபரங்களுக்கு நோட்டீஸ் பார்க்கவும். யாத்ரியர்களுக்கு பற்பல இடங்களிலும் டிக்கட்டுகள் விற்க ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். ஏஜன்ஸி விஷயங்களுக்கும், இதர விபரங்களுக்கும் கீழ்கண்டவருக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

P. சிவகுருநாத பிள்ளை,
ஆர்கனைசர், மங்களாம்பிகை நகர்,
கொரனாட்டுக்கருப்பூர், கும்பகோணம்.